SKY WINGS LTD
TRAVEL AGENTS
WORLWIDE
24 hour
Ticketing
SriLankan Airlines · ROYAL JORDANIAN
119 Tooting High Street
London SW17 0SY
Tel: 020 8672 9111

VADALEE
வடலி
FREE - COMMUNITY PAPER சமூகப் பத்திரிகை October 2007 வடலி 7 ஓலை 77

SS ESTATE AGENT
Sales - Lettings
Mortgages - Business Loans
Tel: 020 8471 7779
Fax: 0871 522 7277
www.ssestate.co.uk

# பிரித்தானியாவுக்கு வேலைதேடிவருபவர்கள் ஆங்கில பரீட்சையை எதிர்கொள்ளவேண்டும்: அரசு

ஐரோப்பிய ஒன்றியம் தவிர்ந்த ஏனைய நாடுகளில் இருந்து வேலைதேடி வருபவர்களுக்கு நாட்டிற்குள் வருவதற்கு முன்னரே ஆங்கிலம் தெரிந்திருக்க வேண்டும் என அரசு எதிர்பார்க்கிறது.

கடந்த வருடம் "திறமை உடையவர்கள்" என்ற பிரிவின் கீழ் வந்த 95,000 பேர்களில் 35,000 பேருக்கு ஆங்கிலம் பேச முடியுமென காட்டமுடியாதிருக்கும் என அரச மதிப்பீடு குறிப்பிடுகிறது. பிரித்தானியாவில் வேலைதேடி வருகிற வெளிநாட்டவர்கள், உயர் திறமை உடையவர்கள், திறமை உடையவர்கள், குறைந்த திறமை உடைவர்கள் என்ற மூன்றில் ஒரு பிரிவில் அடங்குவர். இவர்களில் உயர்திறமை உடையவர்கள் மட்டுமே பிரித்தனியாவுக்குள் பிரவேசிப்பதற்கு அனுமதி பெறுவதற்கு முன் ஆங்கிலமொழி பேசமுடியும் என நிரூபித்துக் காட்டவேண்டும் என்ற கட்டாயம் இதுவரை காலமும் இருந்து வந்தது.

இப்பொழுதிலிருந்து "திறமை உடையவர்கள்" என்ற பிரிவின் கீழ் வருபவர்களும் ஆங்கிலமொழிப் பரீட்சையை எதிர்கொள்ளவேண்டும் என்ற முறையை அரசு கொண்டு வந்துள்ளதுடன், அமைச்சர்கள் "குறைந்த திறமை உடையவர்கள்" என்ற பிரிவினருக்கும் ஆங்கில மொழி அறிவு பரீட்சையை கொண்டுவருவதற்கு ஆலோசித்து வருகின்றனர்.

குறைந்த திறமை உடையவர்கள் என்ற பிரிவினர் நிரந்தர அனுமதி கேட்டு விண்ணப்பிக்கத தகுதியற்றவர்கள்.

இப்பொழுதிலிருந்து "திறமை உடையவர்கள்" என்ற பிரிவின் கீழ் வருபவர்கள் பிரித்தானியாவின் ஜி.சி.எஸ்.சி பரீட்சையில் ஏ-சி தரமுடைய ஆங்கிலமொழி அறிவைக் கொண்டிருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இது தொடர்பாக கொண்சவேட்ரிவ் கட்சியின் பேச்சாளர் கருத்துத் தெரிவிக்கையில், அரசின் இந்த முயற்சி ஒரு சிறிய அளவிலானதே என்றும் தமது கட்சி பதவிக்கு வந்தால் வருடம் ஒன்றிற்கு ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையினரே அனுமதிக்கப்படுவர் என்ற வரம்புமுறை கொண்டுவரப்படும் என கூறியுள்ளார்.

# தாய்மொழியே சிந்தனைக்குரிய வலுவான அடித்தளத்தை அமைக்கும்

மனித சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் அறிவு சார்ந்த புலம் இன்றியமையாததாக இருப்பது கண்கூடு. மொழி பேச, வாசிக்க, எழுதத் துணை நிற்கின்றது. ஒவ்வொரு மதியாளர்களுக்கும் மொழியின் தேர்ச்சி பல வகைப்பட்ட அனுகூலங்களைக் கொடுக்கும். கல்வி என்பது விசாலமானது. மொழி அறிவின் மூலம் மனிதன் கல்வியைத் தேடுகின்றான், பண்பாட்டு விழுமியங்களை பேணிப் பாதுகாப்பதற்கும், அவற்றின்பால் ஈடுபாட்டுடன் வாழ்வதற்கும் மொழி அறிவு இன்றியமையாதது. ஆகவே கல்வியின் முக்கியத்துவம், இங்கே முன்னிற்கிறது.



வல்லரசு நாடுகள், முதலாளித்துவ நாடுகள், மூன்றாம் உலகநாடுகள் என்று உலகம் பிரிக்கப் பட்டிருக்கிறது. குறிப்பாக மூன்றாம் உலக நாடுகள் பல வறிய நாடுகளாக இருப்பதால் மக்களின் வாழ்க்கைத்தரம் பின்தங்கியிருப்பதை அவதானிக்க முடிகின்றது. இத்தகைய நாடுகளில் வாழுகின்ற பெரும்பான்மையான மக்கள் வறுமைக்கோட்டுக்குக் கீழே வாழ்வதனால் கல்வி வசதி குறைந்தவர்களாகவே இருக்கின்றார்கள். வேலையின்மை, உழைப்புக்கேற்ற ஊதியமின்மை, வறுமை, வசதியின்மை, சுரண்டல், மேலாதிக்கத்தின் பாதிப்பு போன்ற பல்வேறுபட்ட காரணங்களால் ஏழ்மையில் வாழுகின்றான். அவனால் எழுத்தறிவை எப்படித்தான் பெற முடியும்.

வல்லரசுகளின் தான்தோன்றித் தனமான ஆதிக்கவெளி, ஆயுத உற்பத்திப் பெருக்கம் ஒரு புதிய ஆயுதக்கலாசாரத்தை உருவாக்கி விட்டது. இன்று உலகின் பல நாடுகளில் போராட்டங்களும், உள்நாட்டு யுத்தங்களும், வெளி நாட்டு ஆக்கிரமிப்புகளும் நடந்து கொண்டிருப்பதால் அழிவுகள் உச்ச நிலை கண்டுள்ளன. தினம் தினம் பல்லாயிரம் மனித உயிர்கள் பறிக்கப்படுகின்றன. கோடானுகோடி மதிப்புள்ள சொத்துக்கள் அழிக்கப் படுகின்றன. சூறையாடப்படுகின்றன. உலகெங்கும் மக்கள் நிம்மதியாக வாழ முடியாமல் அகதிகளாகவும் இடம்பெயர்ந்தும் சொல்லொணாத் துன்பத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஒரு வேளை உணவுக்கே கஸ்டப்படுகின்ற நிலையில் அவர்களிடம் எழுத்தறிவை எதிர்பார்க்கலாமா?

இயற்கை அனர்த்தங்களால் மக்கள் பெரும் பாதிப்புகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலையில் வாழ முடியாமல் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். புயல், சூறாவளி, வெள்ளம், வரட்சி, வெப்பம், நிலநடுக்கம், பூகம்பம் போன்ற இன்னோரன்ன இயற்கை அனர்த்தங்கள் இன்று தொடர்கதையாகிவிட்டன. மனிதன் மனிதனாலும், இயற்கையின் சீற்றத்தாலும் பல்வகைப்பட்ட வேதனைகளைச் சந்தித்தவண்ணம் இருக்கின்றான். இயற்கையின் அனர்த்தங்களுக்கு எல்லோருமே ஆட்கொள்ளப்படுகிற நிலையை இங்கு சுட்டிக்காட்டியே ஆகவேண்டும்.

உலகில் பலகோடி மக்கள் இருக்க இடமின்றி, போதிய உணவின்றி, குடிப்பதற்கு நல்ல நீரின்றி, போதிய சுகாதார வசதியின்றி பல இன்னல்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள், சோமாலியா, எதியோப்பியா போன்ற நாடுகளில் பட்டினியால் செத்துக்கொண்டிருக்கின்றார்கள். போசாக்குக்

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

தரமான தங்கத்திற்கு இண்டனில் சிறந்த இடம்
LAKSHMIS
JEWELLERS
276 High Street North, Eastham, London E12 6SA
Tel: 020 8470 5600 Fax: 020 8470 3448
தரமான தங்கநகைகளை மனநிறைவுடன் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
லக்ஷ்மிஸ் ஜுவலர்ஸ்
தரமான தங்கத்திற்கு இண்டனில் சிறந்த இடம்

WP
Wimbledon Properties
Estate Agents
162 Merton High Street
Wimbledon SW19 1AZ
Looking to
SELL/BUY or RENT/LET
Landlords & Tennants Welcome
Please Call Us
0208-540-4450

JayamNET® LTD.
IT SOLUTION
* Free Hosting
* Photo Repair
* Web & Graphic Desgin
* Free Domain
* Digital photos & invatation cards
*Photos B/W to colour
www.jayamnet.com
Call On:
0793 200 5855

IT Seekers
Bringing IT to your Door Step
கணனி சம்பந்தமான சகல ஆலோசனைகள் மற்றும் திருத்த வேலைகள் அனைத்தும் குறைந்த கட்டணத்தில் நிறைவாகச் செய்து தரப்படும்.



For all your IT need call
Praba 07985218798

Mortgagelink
The National Mortgage Network
Mob - 07930 626 585
Tel - 020 8946 5566
Nearest Underground :Tooting Broadway - Northern Line

☆ எந்தவிதமான DEPOSIT இல்லாமல் வீடு வாங்கவேண்டுமா?
இலண்டனிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் புதிதாக கட்டப்படும் வீடுகள் வாங்க விரும்பினால், 5% DEPOSIT + STAMPDUTY £2000-00 அளவில் வீடுகட்டுபவர்களிடமிருந்து பெற்றுக் கொடுப்போம். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்
YOUR HOME IS AT RISK IF YOU DO NOT KEEP UP REPAYMENTS ON A MORTGAGE OR OTHER LOANS SECURED ON IT

For News /Articles/ Adverts:
020 8694 7412
PO Box 24783 London SE13 7YE
E-mail: vadalee@lycos.co.uk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்தானியச் செய்திகள்

## கர்ப்பிணிகள் சத்துள்ள உணவு உண்ண அரச ஊக்குவிப்பு பணம்

கர்ப்பிணிப் பெண்கள் சத்துணவுகளில் செலவழிப்பதற்கென்று 200 பவுண்களை அவர்கள் வங்கியில் இடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. 2009-ம் ஆண்டு சித்திரை மாதத்திலிருந்து இங்கிலாந்திலுள்ள கர்ப்பிணி தாய்மார்களுக்கு நல்ல சத்துள்ள உணவு உண்பதை ஊக்கப்படுத்தவதற்கு பணத்தொகை ஒன்றினை அவர்களுடைய 29ஆவது கிழமையில் வழங்கப்படவிருக்கிறது.
தர்ம ஸ்தாபனங்கள் அரசின் இந்த முயற்சியை வரவேற்றாலும், இது பயனுள்ளதாக இருக்குமா என்பதில் சந்தேகத்தை வெளிப்படுத்தியுள்ளன.
அதாவது கொடுக்கப்படும் பணம் சத்துள்ள உணவு வாங்குவதற்கு பயன்படுத்தப்படுகிறதா என்பதை நிச்சயப்படுத்திக் கூறமுடியாது. அத்தோடு குழந்தைகளுக்கு 29-ம் கிழமையில் மட்டும் அல்ல அதற்கு முன்பும் சத்துள்ள உணவு தேவைப்படுகிறது என்று கூறியுள்ளன.

"கர்ப்பிணிகள் உடல்நல மானியம்" என்ற அழைக்கப்படும் இப் பணஉதவி சிசுக்களின் இறப்புத் தொகையை குறைக்கவும் உடல்நலத்தில் இருக்கும் சமத்துவமற்ற இடைவெளியை அடைப்பதற்குமாக வழங்கப் படுவதாகும்.
2010-ம் ஆண்டளவில் 10 விழுக்காட்டால் இச் சமத்துவமற்ற இடைவெளி குறையவேண்டும் என அரசு எதிர்பார்க்கின்றது.

## வெளியில் விளையாடாவிட்டால் உடல்நலத்திற்கு கேடு!

பிள்ளைகள் வீட்டிற்கு வெளியே விளையாடும் சந்தர்ப்பங்களை இழந்துவருவதால் அவர்களுடைய உடல்நலம் பாதிக்கப்பட்டு வருகிறது என நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.
பிள்ளைகளின் பாதுகாப்பு பற்றிய கூடிய கவலை, கணனி விளையாட்டுக்கள், பாடசாலைப் பரீட்சைகள் ஆகியன இதற்கான காரணிகளாக கூறப்பட்டுள்ளது. இக் கருத்தை வலியுறுத்தி ஏறத்தாழ 300 கல்விமான்கள், எழுத்தாளர்கள், தர்மஸ்தாபன தலைவர்கள் போன்றோர் கையெழுத்திட்டுள்ளனர்.
ஒழுக்கமைக்கப்படாத, மேற்பார்வை குறைவான விளையாட்டுக்களின் வீழ்ச்சியும் பிள்ளைகளின் உளநலத்தை பாதிப்பதுடன் அவர்களின் நீண்டகால அபிவிருத்தியையும் பாதிக்கின்றது என்றும் கூறப்பட்டுள்ளது.
நிபுணர்கள் வெளியிட்ட கடிதத்தில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் உள்ள மகிழ்ச்சியற்ற சிறுவர்கள் மத்தியில் பிரித்தானிய பிள்ளைகளும் அடங்குகிறார்கள் என்ற யூனிசிவ் அமைப்பின் அண்மைக்கால கருத்தும் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது.
வெளியில் சென்று விளையாடுதல் பிள்ளைகளின் உடல்நலத்திற்கு அத்தியவசியமானது என்று வலியுறுத்தி கூறப்பட்டுள்ளது.

## நோர்வே நாட்டின் மாநகர மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்காக தேர்தலில் 04 தமிழ் பெண்கள் உட்பட 08 தமிழ்ப் பிரதிநிதிகள் வெற்றி

நோர்வே நாட்டின் மாநகர மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்காக நடைபெற்ற தேர்தல்களில் 08 தமிழ் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஓஸ்லோ மாநகரசபை வேட்பாளராகப் போட்டியிட்ட கம்சாயினி குணரட்ணத்தின் பெயர் (தொழிற்கட்சியின் வேட்பாளர்) 2,123 விருப்பு வாக்குகளைப் பெற்று மாநகரசபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஓஸ்லோவின் உள்ளூராட்சி சபைகளான கிறாவுட், ஸ்ரோவெனர் ஆகியவற்றில் போட்டியிட்ட துஸ்யந்தி கணேச்சந்திரா மற்றும் சுமதி விஜயராஜ் ஆகியோரும் வெற்றி பெற்றுள்ளனர். துஸ்யந்தி கணேச்சந்திரா தொழிற்கட்சியின் வேட்ப ாளர் பட்டியலில் வெற்றி பெற்றுள்ளனர். சுமதி விஜயராஜ் வேட்பாளர் பட்டியலில் 10 ஆவது இடத்திலிருந்து 5 ஆவது இடத்திற்கு முன்னகர்த்தப்பட்டு வெற்றி பெற்றுள்ளார்.
ஒஸ்லோவை அடுத்துள்ள லோறன்ஸ்கூ நகரசபை வேட்பாளராகப் போட்டியிட்ட திலகவதி சண்முகநாதன் நகரசபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். Grorud உள்ளூராட்சி சபையில் சோசலிச இடதுசாரிக் கட்சி சார்பில் போட்டியிட்ட புலேந்திரன் கனகரட்ணம், ஸ்ரோவெனர் உள்ளூராட்சி சபையில் போட்டியிட்ட ஆதித்தன் குமாரசாமி ஆகியோரும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களாகத் தெரிவாகியுள்ளனர். துரொம்சோ நகரசபையின் "றெட் அலாயன்ஸ்" கட்சியின் வேட்பாளரான மரியா சிறிகரன் மற்றும் நார்வீக் நகரசபை வேட்பாளராகப் போட்டியிட்ட அன்பழகன் இரத்தினசிங்கம் ஆகியோரும் வெற்றி பெற்றுள்ளனர். நோர்வே நாட்டில் சும்மார் 20 ஆயிரம் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

## தனிமை வாட்டுகின்றது

ஒற்றையாக வாழ்வது என்பது சாமான்யப்பட்ட விடயமல்ல. அதுதான் இறைவன் ஆண், பெண் என்று இருபாலாரைப் படைத்து, ஒருவருக்கு ஒருவர் துணையாக வாழ, வழி சமைத்துக் கொடுத்துள்ளான். ஜப்பானில் ஒருவருக்கு தனிமை வாட்டியதால், வேறுவழியின்றி, தொலைபேசியின் துணையை நாடி, இறுதியில் சிறைவாசத்தையும் அனுபவிக்க வேண்டிய வராகி உள்ளார். தனியனாக வழந்து வந்த, இந்த 58 வயதான ஜப்பானியர், 388 தடவைகள் பொலிசாரையும், தீயணைப் படையினரையும், தொலைபேசி மூலம் அழைத்த குற்றத்திற்காக கைதாகி உள்ளார். திருமணமாகாத இவர், வட ரோக்கியோ நகரிலுள்ள தீயணைப் படையினரை, வரிசைக் கிரமமாக தொலைபேசி இணைப்பை ஏற்படுத்தி, அழைத்துள்ளமை, வெறும் நட்பைத் தேடுதலுக்காகத்தான் என்று பின்பு தெரியவந்துள்ளது. ஒரு தடவை 10 தீயணை இயந்திரங்களும், ஓர் அம்புலன்ஸ் வண்டியும், 35 தீயணைப் படையினரும், இவர் வீட்டிற்கு அனுப்பப்பட்டிருக்கின்றார்கள். கைது செய்ப்பட்ட இவர், பொலிஸாரிடம் தன் குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார். நான் தனியனாக வாழ்வது, எனக்கு மிகுந்த கவலையைத் தருகின்றது. என்னை நேரில் வந்து, பொலீஸாரும், தீணணைப் படையினரும் பார்க்கட்டும் என்பதற்காகவே, இப்படிச் செய்தேன் என்கிறார் இந்தப் பிரமச்சாரி!

ஏ.ஜே.ஜி

## இரு வாரங்களுக்கு ஒரு மொழி வீதம் வழக்கொழிந்து வரும் உலக மொழிகள்

உலகம் முழுவதிலும் வழக்கத்திலுள்ள 7000 மொழிகளில் இரு வாரங்களுக்கு ஒரு மொழிவீதம் அழிவடைந்து வருவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.
அவுஸ்திரேலியா, சேர்பியா மற்றும் அமெரிக்காவின் ஒக்லகோமா மாநில கிராமங்களின் மொழிகள் அழிவடைந்துவரும் அதேவேளை, இதற்கு பாரம்பரியத்திற்கும் வரலாற்றிற்கும் உருக்கொடுக்கும் மக்கள் மரணமடைந்து வருவதே காரணமென ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
அருகிவரும் மொழிகள் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொள்ளும் நிறுவனமொன்று அழிவடையும் ஆபத்தை நெருங்கியுள்ள மொழிகளில் மிகவும் முக்கியமான 5 மொழிகள் உள்ளடங்கியிருப்பதாக தெரிவித்துள்ளது.

மொழிகளை இழப்பதற்கான அர்த்தம் அறிவை இழப்பதாகுமெனத் தெரிவித்துள்ள ஸ்வார்த்மோர் கல்லூரியின் மொழியியல்துறை பேராசிரியர் டேவிட் நரிகன், நடைமுறையிலுள்ள அரைவாசி மொழிகள் ஒருபோதுமே எழுதப்படாமல் இருப்பதாக மதிப்பிட்டுள்ளார்.

இதனால் இம்மொழி பேசுபவர்கள் நாளை மறைந்து போனால் இம்மொழிகளை நாம் இழக்க நேரிடும். ஏனெனில் இவைகளுக்கான அகராதியோ, இலக்கியமோ ஏனைய ஏடுகளோ உருவாக்கப்படவில்லையெனத் தெரிவித்துள்ளார்.
இவ் ஆய்வுகளை மேற்கொண்ட வேறொரு நிபுணர் தெரிவிக்கையில்
ஒரு மொழியானது சில விடயங்களை மேற்கொள்வதற்கு தடையாகவுள்ளதென ஒரு சமூகம் தீர்மானிக்கும் போதே அம்மொழிக்கு ஆபத்து ஏற்படுகின்றது. அழிவடையும் மொழியொன்றை மீண்டும் முக்கியம் வாய்ந்ததாக மாற்றுவதற்கு புதிய சந்ததியொன்று அதனைப் பேசவேண்டும். இதற்கு நிறுவனங்கள் உள்ளூர் சமூகங்களுடன் இணைந்து செயற்படுவதுடன், மொழிகளைக் கற்பிக்கும் முறைகளையும் அவற்றைப் பதிவு செய்யும் நடவடிக்கைகளையும் ஊக்குவிக்க வேண்டும்.
உலகில் 80 வீதமான சனத்தொகையினர் 83 மொழிகளையே பேசும் அதேவேளை, 3500 சிறிய மொழிகளை உலக சனத்தொகையில் 0.2 வீதத்தினரே பேசுவதாக தெரிவித்துள்ளதுடன், தாவரங்கள் மற்றும் விலங்கினங்களை விட மொழிகளே அதிகளவில் ஆபத்துக் குள்ளாகியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.


## ஏழு ஆண்டுகள் மட்டுமே செல்லுபடியாகும் திருமணப் பதிவு

ஏழு ஆண்டுகள் மட்டுமே செல்லுபடியாகும் திருமணப்பதிவுச் சட்டம் தொடர்பாக ஜேர்மன் அரசு ஆலோசித்து வருகின்றது.
ஏழு ஆண்டுகள் கடந்ததும் திருமணப் பதிவொன்று இயல்பாகவே காலாவதியாகிவிடும். ஆனால், இதற்குப் பிற்பாடு நீடிக்க விரும்புபவர்கள் நீடிக்கலாம் விரும்பாதவர்கள் விவகாரத்துப் பெறலாம். இதுவே தற்பொழுது ஆலோசனை செய்யப்படும் ஜேர்மன் அரசின் புதிய திருமணச் சட்டமாகும்.
ஜேர்மனியில் விவகாரத்துகள் அதிகரித்து வரும் நிலையில் இதனைக் குறைப்பது தொடர்பாக ஆலோசித்துவரும் அரசுக்கு கேபரிலிபால் என்ற பாராளுமன்ற உறுப்பினர் இந்தப் புதிய சட்டத்தை முன்மொழிந்திருப்பதுடன் இந்த ஏழு ஆண்டுகளுக்குள் விவாகரத்து வழங்கக் கூடாதெனவும் தெரிவித்துள்ளார்.
இப்புதிய சட்டத்தினை அமுலுக்குக் கொண்டுவரலாமா என்பது பற்றி ஜேர்மன் அரசு ஆலோசனை செய்கின்ற அதேவேளை இச்சட்டம் அமுலுக்கு வந்தால் திருமணமான ஓரிரு ஆண்டுகளில் விவாகரத்து செய்து கொள்வது குறையுமென எதிர்பார்க்கப் படுகின்றது.

## "நௌறு" முகாமில் தடுத்து வைக்கப்பட்டோரில் 72 பேருக்கு அவுஸ்திரேலியாவில் அகதி அந்தஸ்து

அவுஸ்திரேலியாவில் அகதி அந்தஸ்து கோரியிருந்த 83 தமிழர்களில் 72 பேருக்கு அகதி அந்தஸ்து அளிக்கப்படுவதாக அவுஸ்திரேலிய அரசாங்கம் அறிவித்துள்ளது. இது தொடர்பாக அவுஸ்திரேலிய குடியேற்றத்துறை கூறியதாவது.

அவுஸ்திரேலியாவில் அகதி அந்தஸ்து கோரியிருந்த 83 இலங்கை தமிழர்களில் 72 பேருக்கு அகதி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. ஒருவருக்கு அகதி அந்தஸ்து மறுக்கப்பட்டுள்ளது. நௌறு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 7 பேரின் அகதி அந்தஸ்து தொடர்பில் இறுதி முடிவு எடுக்கவில்லை. பரிசீலித்து வருகிறோம்.
மேலும் இருவர் அவுஸ்திரேலியாவுக்கு வரும் முன்னரே இந்தோனேசியாவில் அகதி அந்தஸ்து பெற்றிருந்தனர். அதனை ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான ஆணையம் உறுதி செய்துள்ளது என்றார் அவர்.
இலங்கையிலிருந்து வெளியேறி அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவு அருகே கடந்த பெப்ரவரி 20 ஆம் திகதி கரை சேர்ந்த இலங்கைத் தமிழர்களை அவுஸ்திரேலிய அரசாங்கம் கைது செய்தது.அவர்கள் அனைவரையும் நௌறு தீவில் உள்ள




முகாமில் தடுத்து வைத்தது.
தங்களை அகதிகளாக அங்கீகரிக்கக் கோரி நௌறு தீவு முகாமிலிருந்த தமிழர்கள் தொடர்ச்சியான பல்வேறு போராட்டங்களை நடத்தி வந்த நிலையில் அவுஸ்திரேலிய அரசாங்கம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

வடலியில் வெளிவரும் ஆக்கங்களுக்கு படைப்பாளிகளும் விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். வடலி எந்த வகையிலும் பொறுப்பேற்காது. வாசகர்கள் அனுப்பும் ஆக்கங்களை திருத்தியமைக்கவும் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு.

## உங்கள் கேள்விகளும் உதவாத பதில்களும்

அடுத்த மாதத்தில் இருந்து வடலியில் கேள்வி - பதில் பகுதி ஆரம்பமாக உள்ளது. அரசு மீண்டும் உங்கள் கேள்விகளுக்கு பதிலளிக்க உள்ளார்
கேள்விகள் அனுப்பவேண்டிய முகவரி : Arasu, Vadalee. PO Box 24783, London SE13 7YE. தயவுசெய்து உங்கள் கேள்விகளை 20ம் திகதிக்கு முன்னர் கிடைக்கும் படியாக அனுப்பவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரை நூற்றாண்டுக்கு முன் குடாநாட்டில்!.. - 7

- தி.ச.வரதர்

# யோகர் சுவாமிகளுடன் சந்திப்பு

*1920ம் ஆண்டில் இருந்து 1960ம் ஆண்டு வரையிலான 40 ஆண்டு காலத்தில் தமிழ்பிரதேசங்களில் குறிப்பாக யாழ்குடாவில் சமூக ஈடுபாடு, சமூக கட்டமைப்பு, வாழ்க்கை முறை, வாழ்வாதாரங்கள், போன்றவை எப்படி இருந்தன என்று இப்போது இருக்கும் பலருக்கு தெரியாது.*

*பொதுவாக அறுபது 70களில் இருந்த வாழ்க்கை முறையே தான் அதற்குமுன்பும் இருந்திருக்கும் என்று அவர்கள் எண்ணு வார்கள். இது இயல்பே. ஆயினும் நிலமைகள் உண்மையில் எப்படி இருந்தன என்பதை ஈழத்தின் மூத்த எழுத்தாளர்களில் ஒருவரான திரு.தி.ச.வரதராசன் அவர்களின் நினைவில் மலர்ந்த சில சம்பவங்களின் ஊடாக வாசகர்கள் முன்கொண்டுவருகிறோம்*

நான் மிகச் சிறுவனாக இருந்தபோது, அப்பா தினசரி தீட்சை 'அனுட்டானம்' பார்ப்பதும், நெற்றி, மார்பு, கைகள் முதலிய இடங்களில் திருநீற்றைக் குழைத்து மூன்று விரல்களால் அழகாகப் பூசுவதும். சந்தனக் கல்லில் சந்தனம் அரைத்து பொட்டு வைப்பமுண்டு. ஆனால் பிறகு அவற்றையெல்லாம் விட்டு விட்டு, விபூதியை நெற்றியில் பரவிப் பூசி 'சிவ சிவ' என்று சொல்லிக் கொள்வதோடு அவருடைய கடவுள் வணக்கம் நின்றுவிட்டது. ஆனால், இன்னொரு விடயத்தை மட்டும் எனக்குத் தெரிந்த நாள் முதல் கடைசிவரையும் ஒழுங்காகச் செய்துவந்தார். அது தியானம். யோகாப்பியாசம் என்று சொல்லலாம்.

தினசரி அதிகாலையில் பொழுது விடியுமுன், கொடியிலிருக்கும் மான்தோலை எடுத்து ஒரு தட்டுத்தட்டி தூசி கலைத்துவிட்டு அதைக் கட்டிலின் மீது போடுவார். அதன் மேல் ஒரு சுத்தமான நாலு முழத் துண்டை மடித்துப் போடுவார். பிறகு அதன் மீது கால்களைப் பத்மாசனமாகப் போட்டுக் கொண்டு உட்காருவார். இரண்டு கைகளையும் முழங்கால்களின் மீது வைத்துக் கொள்வார். பிறகு கண்களையும் மூடிக்கொண்டு ஏதோ கணக்குப் பண்ணி மூச்சை உள்ளே இழுப்பதும் வெளியே விடுவதமாக இருப்பார் - இது சுமார் பதினைந்து நிமிடங்களுக்கு மேல் நடக்கும். அதன் பிறகு சில நிமிடங்கள் குறிப்பிட்ட சில பாடல்களைப் பாடுவார்.

'சீதக் கனபச் செழுந்தாமரைப்பூவும், 'கெல்லாப் பிழையும் கருதாப் பிழையும்' ஆகிய பாடல்களை அவர் தினசரி பாடுவது நினைவு வருகிறது.

இதே யோகாசனக் காட்சி இரவிலும் சுமார் ஏழுமணியளவில் - சாப்பாட்டுக்கு முன் நடக்கும். தினசரி காலையும் மாலையும், அப்பா யோகாப்பியாசம் செய்வதை நான்



பல ஆண்டுகளாக பார்த்திருக்கிறேன். இந்த யோகாப்பியாசப் பயிற்சிக்கு அவருக்கு யாரும் 'குரு' இருந்ததாகத் தெரியவில்லை. அந்த வழியில் அவரை ஊக்கியவர் யாரென்பதும் தெரியவில்லை. எங்கள் ஊரில் அப்படி வேறு யாரும் யோகப்பியாச்ப பயிற்சி செய்ததாகவும் தெரியவில்லை.

அப்பாவிடம் இரண்டு புத்தகங்கள் இருந்தன. அவற்றுள் ஒன்று கடப்பை, சச்சிதானந்த யோகீஸ்வரர் என்பவர் எழுதிய யோகாசனம் பற்றிய நூல், பெரிய மொத்தப் புத்தகம், அதில் சச்சிதானந்த யோகீஸ்வரர் பத்மாசனமிட்டு யோகாசனத்தில் இருக்கும். ஒரு அழகான போட்டோப் படமும் இருந்தது. அப்பா அந்தப் புத்தகத்தைப் படித்தே யோகாசனப் பயிற்சியை தொடங்கியிருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். ஆனால் அப்படி ஒரு நூலை வாங்கவோ, யோகாசனப் பயிற்சி செய்ய வேண்டுமென்ற விருப்பத்தை அவருக்கு உண்டாக்க யாரோ ஒருவர் இருந்திருக்க வேண்டும். அது யாரென்று தெரியவில்லை.

யாழ்ப்பாணத்தில் அப்போது யோகர் சாமியார் இருந்தக்காலம். அப்பாவும் யோகரும் சம காலத்தவர்கள். யோகர் சாமி பிறந்தது 1865-ம் ஆண்டென்றும், மறைந்தது 1964 ம் ஆண்டன்றும், திரு. ச. அம்பிகைபாகன் எழுதிய நூலிலே குறிப்பிடப்பட்டிருக்கிறார். அதன்படி அப்பா யோகர் சுவாமிக்கு பதினைந்து வயது இளையவர். இவ்வுலகில் சுமார் நூறு ஆண்டுகளாக வாழ்ந்த சாதனை யோகர் சுவாமிக்குண்டு. அப்பா அறுவது ஆண்டுகளே வாழ்ந்தார். அப்பாவும் யோகர் சுவாமியும் சம காலத்தவரேயாயினும், யோகரோடு அப்பாவுக்குப் பழக்கம் இருந்ததில்லை. யோகர் சுவாமிகளைப் பற்றிக் கேள்விப்பட்டு அவரைப் பார்ப்பதற்காக ஒரு முறை அப்பா கொழும்புத்துறைக்குப் போனாராம். அப்பா யோகரை அதற்குமுன் கண்டதில்லை. வழி விசாரித்து, யோகரின் வீட்டுக்குப் போயிருக்கிறார். அங்கேயிருந்த ஒருவரிடம் 'யோகர் இருக்கிறாரா? என்று கேட்டிருக்கிறார். 'அவன் இங்கே இல்லை. கொழும்புக்குப் போய்விட்டான்! 'என்று அப்பாவுக்குப் பதில் கிடைத்தது. யாரிவன், சுவாமியை 'அவன் இவன்' என்று கதைக்கிறானே என்று நினைத்துக் கொண்டு அப்பா திரும்பிவிட்டார்.

பிறகு யாரிடமோ இந்த நிகழ்ச்சியைச் சொல்லிக் கதைத்தபோது அப்பாவுக்குப் பதில் சொல்லித் திருப்பி அனுப்பியவர்தான் யோகர் என்று தெரியவந்தது.

மீண்டும் ஒரு முறை யோகர் சுவாமியைப் பார்ப்பதற்காக அப்பா பயணம் வெளிக் கிட்டார் - பயணந்தான். பொன்னாலையிலிருந்து கொழும்புத்துறை பன்னிரண்டு மைல் தூரம், பஸ்ஸா, காரா? மாட்டுவண்டிப் பயணந்தானே!

அப்பா தனது ஒற்றைத் திருக்கல் வண்டியில் புறப்பட்டார். இம்முறை என்ன நினைத்தாரோ, மிக சிறு பையனாக இருந்த என்னையும் கூட்டிக் கொண்டு போனார். ஆதிகாலை நாலு மணிக்கு எழும்பி மாட்டுவண்டி புறப்பட்டது நினைவிருக்கிறது. வழிப் பயணம் எதுவும் தெரியாது வண்டிக்குள் நித்திரை. அப்பொழுது எனக்கு ஏழெட்டு வயது தானிருக்கும்.

ஒரு வீட்டின் தலைவாசல் போன்ற ஒரு இடத்தில் சுமார் பதினைந்து இருபது பேர்கள் கூடியிருந்தார்கள். கூட்டத்தின் தலைவர் போல ஒருவர் உட்கார்ந்திருக்கிறார். அவர்தான் யோகர் சுவாமியாக இருக்க வேண்டும். குத்து விளக்கு ஏற்றியிருந்தும், கற்பூரம் எரிந்ததும், யாரோ தேவாரம் பாடிக்கொண்டிருந்தும் என் நினைவின் அடி ஆழத்திலிருந்து நிழற் காட்சிகளாக இப்போது எனக்குத் தெரிகின்றன.

அந்த அடியார் கூட்டத்தில் நானும் அப்பாவும் ஒரு பக்கமாக உட்கார்ந்து கொண்டோம். தேவாரம் பாடி முடிந்தது. ஓவ்வொருவராக யோகர் சுவாமியின் அருகில் சென்று அவரை வணங்குகிறார்கள். சிலர் கற்கண்டு வாழைப்பழம் முதலிய பொருள்களை அவர் முன் படைக்கிறார்கள். அப்பா அவரை வணங்கி எழுந்த பிறகு நானும் நிலத்தில் நீளக் கிடந்து (அட்டாங்கமாக) யோகரை வணங்கி எழுகிறேன்.

இந்த இடத்தில் ஒரு புது நினைவு இப்போதெல்லாம் கோயில்களில் கூட தரையில் குப்புறப்படுத்து அட்டாங்க வணக்கம் செய்யும் பழக்கம் குறைந்து வருவதுப் போலத் தெரிகிறது. இதைப் பற்றி ஏன் எழுதுகிறேனென்றால், இந்தக் காலத்தில் - சில ஆண்டுகளுக்கு முன்னால் நான் கொழும்பு சென்றிருந்த போது, நண்பர் சில்லையூர் செல்ராசனைச் சந்திப்பதற்காக அவருடைய வீட்டுக்குப் போயிருந்தேன். நாங்கள் பேசிக் கொண்டிருந்த போது அவருடைய புகழ் வாய்ந்த மனைவி கமலினியும் ஒரு சிறுவனும் அந்த இடத்திற்கு வந்தார்கள்.

சிறுவனைத் தங்கள் மகன் என்று எனக்கு அறிமுகப்படுத்தி விட்டு, அவனிடம் ஏதோ மெதுவாகச் சொன்னார் செல்வராசன். உடனே அந்தச் சிறுவன் என் காலருகே தரையிலே

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

# விடலைப் பருவமும் மாற்றங்களும்

பத்திலிருந்து பத்தொன்பது வயதுக்கு உட்பட்டவர்களே விடலைப் (ரீன் ஏஜ்) பருவத்தினர் என உலக நலமையம் வரையறை செய்திருக்கிறது.

விடலைப் பருவத்தை தமிழில் விடலைப் பருவத்தினர் என்பார்கள். அதாவது குழந்தையாகவும் இல்லாமல், வயது வந்த பருவத்திலும் இல்லாமல் இரண்டுங்கெட்டான் நிலை என்பார்களே அப்படிப்பட்ட நிலையிலுள்ள பருவம்தான் விடலைப் பருவம்.

ஒவ்வொரு மனிதருக்கும் இந்த விடலைப் பருவம்தான் முக்கியமானது. காரணம், இதுதான் வளர்ச்சிப் பருவம். உடல் தோற்றத்திலும், மன வளர்ச்சியிலும் மாற்றங்கள் தோன்றும்.

அவர்களுக்குக் குரல் மாற்றம், உடல் வளர்ச்சியடைதல், பிறப்புறுப்பு பகுதியில் உரோமம் தோன்றுதல், பெண்ணுக்கு மார்பகம் வளர்தல், பையனுக்கு அரும்பு மீசை, ஆணுறுப்பு வளர்தல் இப்படி பல மாற்றங்கள் நேரும்.

முகத்தில் எண்ணெய்ப் பசை வடிதல், பருக்கள் தோன்றுதல் போன்றவையும் இருக்கும். இந்த வயதின் துவக்க காலம் மிக முக்கியமான காலம், ஒவ்வொன்றையும் சந்தேகத்துடனும் ஆராய்ச்சி மனப்பான்மையிலும் விடலைப் பருவத்தினர் பார்க்க ஆரம்பிப்பார்கள்.

அதேபோல, சிறுவயதில் அவர்கள் சாதாரணமாகப் பார்த்த எல்லாமே இப்போது முக்கியமானதாக தெரிய ஆரம்பிக்கும். பெரும்பாலான வேளைகளில் பருவக் குழப்பத்தால் பீடிக்கப்பட்டு தவிப்பார்கள். இது படிக்கிற வயசு என அவர்களை மட்டம் தட்டி உட்கார வைத்து விடாமல், இந்த பருவத்தில் என்னென்ன விதமான உடல் மாற்றங்கள், உணர்வு மாற்றங்கள் ஏற்படும்



என்பனவற்றை எடுத்துச் சொல்ல வேண்டும். இந்த வயதுப் பிள்ளைகள் மனதில் சமூக அக்கறையை வளர்த்துவிட்டால் பிற்காலத்தில் அவர்கள் நல்லவர்களாக, வல்லவர்களாக வளருவார்கள்.

இந்த வயதில் அவர்களுக்குத் தோன்றும் மாற்றங்கள், பிரச்சினைகள், நோய்கள் என ஒவ்வொன்றையும் தெரிந்துகொள்வது விடலைகளுக்கு மட்டுமல்ல, எல்லோருக்கும் பயன் தரக் கூடியதாகும்.


**Croydon Tutorial College**

A CENTRE OF ACADEMIC EXCELLENCE

30-32 Southend, South Croydon, Surrey, CR0 1DN

Tel:020 8688 5777 Tel/Fax: 020 8688 5776

Email: admin@croydontutorialcollege.co.uk

**Disappointing Results???**

*Enrol now for GCSE, GCE AS and A2 FULL TIME CLASSES*

**For November/January/June Examinations**

Coaching by experienced tutors

Official Examination Centre for all UK's leading Exam Boards

- Physics
- Chemistry (Including Salters Chemistry)
- Biology
- Maths (Pure, Mechanics, Statistics)
- English
- ICT
- Accounts
- Further mathematics
- Modern Languages
- Business Studies
- Economics

**GCSE REVISION**

English

Mathematics

Physics

Biology

Chemistry

ICT/Computing

French/German/Spanish

Evening classes for Years 7, 8, 9, 10, GCSE, AS and A2.

*Press fast forward to reach your potential*

**Visit our website - www.croydontutorialcollege.co.uk**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடலி

தொலைபேசி:
**020 8694 7412**

தொலைநகல்:
020 8694 7412

விளம்பரம்:
020 8694 7412

மின்னஞ்சல்:
Vadalee@lycos.co.uk

இணையம்:
www.vadalee.com

முகவரி:
**VADALEE**
**PO BOX - 24783**
**LONDON**
**SE13 7YE**

இப் பத்திரிகையை மாதம் தோறும் தபாலில் பெறுவதற்கு ஓர் ஆண்டு சந்தா 7.00 பவுண்கள். ஐரோப்பாவுக்கு 25 யூறோக்கள்

Cheque or Postal order
Payable to: VADALEE


# மரதன் ஓட்டப் போட்டியில் "வெண்புறா" பெண் தொண்டர்கள்

பிரித்தானியாவில் நடைபெறும் மரதன் ஓட்டப் போட்டிகளில் "வெண்புறா" பெண் தொண்டர்கள் பங்கேற்று சிறிலங்கா இராணுவத்தினரின் கண்ணிவெடிகளால் மக்களுக்கு ஏற்பட்டு வரும் பாதிப்புகளை விளக்கி வருகின்றனர்.

இது தொடர்பில் "வெண்புறா" அமைப்பு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அங்கமான "வெண்புறா" அமைப்பு தனது பணிகள் தொடர்பாக பல்வேறு விழிப்புணர்வுப் பிரசாரங்களை புலம்பெயர்ந்த நாடுகளில் மேற்கொண்டு வருகின்றது.

இதன் ஒரு அங்கமாக பிரித்தானியாவில் நடைபெறும் மரதன் ஓட்டப் போட்டிகளில் "வெண்புறா" தொண்டர்கள் கலந்து கொண்டு சிறிலங்கா இராணுவத்தினரால் விதைக்கப் பட்ட கண்ணிவெடிகளால் மக்களுக்கு ஏற்பட்டு வரும் பாதிப்புக்கள் குறித்து பரப்புரை செய்து வருகின்றனர்.

இலண்டனின் மையப் பகுதியில் உள்ள கைட் பார்க்கில் சென்ற மாதம் 16ம் திகதி நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பெண்களுக் கான மரதன் ஓட்டப் போட்டியில் (Womens Hydro Active Women's Challenge) முதன் முறையாக 9 பெண்கள் கலந்துகொண்டு விழிப்புணர்வுப் பிரசாரத்தினை மேற் கொண்டிருந்தனர்.

இலண்டன், பேர்மிங்காம், லிவர்பூல் ஆகிய நகரங்களில் ஒரே நேரத்தில் நடைபெற்ற இந்த மரதன் ஓட்டப் போட்டிகளில் இலண்டனில் மட்டும் 17,000 போட்டியாளர்கள் கலந்து கொண்டனர்.

காலை 11.00 மணிக்கு தொடங்கிய இந்த மரதன் ஓட்டப்போட்டியில் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்தவர்களும், தனிநபர் களுமாக ஆயிரக்கணக்கில் போட்டியாளர்கள் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தனர்.

"வெண்புறா" சார்பில் கலந்துகொண்ட 9 தொண்டர்களும் 5 கிலோமீற்றர் தூரத்தை ஓடி முடித்துள்ளனர்.

மிகப் பிரமாண்டமாக நடைபெறும் "இலண்டன் மரதனின்" ஒரு அங்கமாக இடம்பெறும் இவ்வாறான போட்களில் ஒன்றான "சிற்றி றேஸ்" என்ற கடந்த சில மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற மற்றொரு மரதன் ஓட்டப் போட்டியில் வெண்புறாவின் தொண்டர்களான 20 ஆண், பெண் உறுப்பினர்கள் கலந்து கொண்டு விழிப்புணர்வுப் பிரசாரத்தினை மேற்கொண்டிருந்தமையும் சுட்டிக்காட்டத் தக்கது என்று அச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.







10வது ஆண்டாக Greenford மண்டபத்தில்
ஸ்ரீமதி யோகா தில்லைநாதனின்





**இளைய கானக்குயில் 2007**

October 20ம் திகதி சனிக்கிழமை
மாலை 6.00 மணிக்கு நடைபெறுகிறது

- Iyngaran International
- Tharany Jewellers
- A-Lanka Travel Ltd
- London Baba Suresh Krishna
- Vee Key Autos
- Ratnam & Co Solicitors
- Rasam Gayathri Silks
- Rathy Jewellers
- Sarasvathy Bavan
- Prime UK Estate Agent
- Lucky Windows
- Vaishna Super Food

ஆகியோர் ஆதரவில் இடம்பெறும் இந்நிகழ்ச்சியில்

★ 10 சின்னஞ்சிறுசுகளும் 10 இளைஞர் யுவதிகளும் போட்டியாளர்களாக கலந்து சிறப்பிக்கிறார்கள்.

★ ஈழத்திருநாட்டிலிருந்து எமது பெற்றோர் புலம்பெயர்ந்து வந்தாலும் எங்கள் உயிரான தமிழை நாம் மறக்கவில்லை, எமக்கு தமிழ்பாடல் பாட மேடை வழங்கி இலண்டனில் முன்னணி இசைக்குழுவான சித்திராலயா இசைக் குழுவினரின் பின்னணி இசைவழங்கி, ஒலி அமைப்பில் முதன்மை யாளர்களான Sooriya Sound இன் ஒலி வழங்கி 10 ஆண்டுகளாக உற்சாகப் படுத்தும் கானக்குயில் அமைப்பாளர்களின் கானக்குயில் நிகழ்ச்சிக்கு கடந்த ஆண்டுகளைப்போல் 20/10/2007 Greenford நகர மண்டபம் வருகை தந்து எம்மை அன்புடன் உற்சாகப்படுத்துங்கள் என அன்போடு அழைக்கிறோம் என்று குரல் எழுப்புகிறார்கள் இந்த சின்னஞ்சிறுசுகள்.

★ ரிக்கற்கள் October 20ம் திகதி மாலை 5 மணிமுதல் மண்டப வாயிலில் வாங்கலாம்.

தொடர்புகளுக்கு: **020 8390 5823**

ரசிகர்களால் தெரிவுசெய்யப்பட்ட கடந்த ஆண்டுகளின் பால, இளைய கானக்குயில்களின் சிறப்புப் பாடல்களும் இடம் பெறுகின்றன.

★ ஊடக அனுசரணை: தீபம் தொலைக்காட்சி



**MANAGEMENT OPPORTUNITY**

**Local Supermarket /Grocery Shop**
**(for Under Management Available)**
**Location: Bedford**
**Takings: £15,000 + £7000 Top up /Week**
**Further Details: Contact**
**07940 591 353, 01234 212409**


## ஸ்ரீ மாதா அமிர்தானந்தமயி தேவி அவர்களின் இலண்டன் வருகை பிற்போடப்பட்டுள்ளது



**சிறி மாதா அமிர்தானந்தமயி தேவி அவர்கள் October 9, 10, 11, 2007 இல் இலண்டன் Crystal Palace இற்கு மேற்கொள்ளவிருந்த வருகை தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகிறோம்.**

**அம்மாவின் வருகை பற்றிய மேலதிக விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.**
**உங்களுக்கு தெரிந்த ஏனையோர்க்கும் இந்த அறிவிப்பினை தெரியப்படுத்துமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.**

# எலி கிளப்பிய கிலி

சிறியவர்களாக இருந்தாலும், சமயா சமயங்களில், பெரிய வேலைகளைச் செய்து அசத்தி விடுகின்றார்கள். ஆச்சரியத்தையும் ஏற்படுத்துகின்றார்கள். இதுவும் ஒரு விமானத்தின் கதைதான். ஆனால் இதில் சம்பந்தப்பட்ட விமானம், போயிங் 777 ரக விமானம். பொதுவாகவே இன்றைய நாட்களில், ஒரு விமானம், விமானத் தளத்திலிருந்து, பல பரிசோதனைகளின் முடிவில், அதனிடத்திற்கு பத்திரமாகப் போய் தரையிறங்குவதற்குள், போதும் போதும் என்றாகி விடுவதுண்டு. அந்த அளவிற்கு வரிசையாகச் சோதனைகள். வியட் நாமிலிருந்து ஜப்பானுக்குப் புறப்பட இருந்த விமானம், ஒரு சிறு வெள்ளெலியால், பல மணி நேர தாமதத்திற்குப் பின்பே, மேலேறி இருக்கின்றது. ஒரு பயணிதான் முதலில், விமானத்திற்குள் ஜாலியாக ஓடித்திரிந்த இந்த எலியைக் கண்டுள்ளார். இவர் இதுபற்றி விமான ஊழியர் ஒருவருக்குத் தெரிவிக்க, உடனடியாக எலிவேட்டை ஆரம்பமாகி இருக்கின்றது. எங்காவது புகுந்து, விமானத்தின் முக்கியமான மின்சார இணைப்பொன்றை, கடித்து துண்டித்து விட்டால், நிலைமை மோசமாகி விடும். எனவேதான் இந்தத் தேடுதல் வேட்டை முடுக்கி விடப்பட்டது. சாப்பாடு வைக்கப்பட்டிருநத இடத்தில் எலி பிடிக்கப்பட்டு, கொல்லப்பட்ட பின்புதான், விமானம் ஆகாய மார்க்கமாக, பயணிகளுடன் பறந்திருக்கின்றது. (ஏஜேஜி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டொக்டர். ஆ.விசாகரெத்தினம்

# சமூகமும் சமயமும்

உலகில் வாழும் மனித குலம், உலகெங்கும் பரந்து வாழுகின்றன. உலகமோ வெவ்வேறு சூழல், சுகாத்தியத்தை உடைய, ஒரு பிரமாண்டமான கோளாகச்சுற்றிச் சுழன்று வருகிது. இதில் நீர்ப்பரப்பால் பிரிக்கப்பட்ட பல நிலப் பரப்புகள் இருக்கின்றன, இவற்றை மனிதன் பல்வேறு கண்டங்களாகப் பெயரிட்டு அடையாளப் படுத்தி இருக்கிறார்கள்.

இவற்றுள் சில வெப்ப வலையத்துக்குள்ளும், வேறு சில குளிர்ப் பிரதேசத்திலும் இருக்கின்றன. இவை அந்தந்தப் பிரதேசங் களின், நில வளம், நீர் வளம், மற்றும் அந்தந்தப் பிரதேசங்களுக்கு உரிய இயற்கைச் சூழலுக்கு அமையவே அப்பிரதேசங்களின் சுகாத்திய வாழ்வும் அமைந்திருக்கிறது.

ஆகவே இவ்வித வேறுபட்ட இயற்கைச் சூழல், சுகாத்திய வேறுபாடுகளுக்கு அமையவே அங்கு காலம் காலமாக வாழும் மனித குலத்தின் மரபுவழிச் சாயல் அவர்களின், அங்க அமைப்பு, நிறம், மொழி, வாழ்கை முறைகளும் வேறுபட்டே இருக்கின்றன.

இவ்விதம் வேறுபட்டு வாழ்ந்த மக்களை அவர்களின் பிரதேச அடிப்படையிலும், மொழியை அடிப்படையாக வைத்துமே அவர்கள் இனங்களாணப் பட்டு, அந்தந்த மொழிக்குரிய இனத்தவராக அவர்கள் அடையாளப் படுத்தப் பட்டனர். இந்த அடிப்படையில் தான் மனித குலம் வெவ்வேறு இனங்களாக முதலில் இனங்காணப் பட்டிருக்கிறது.

இக்காலகட்டத்தில் மனிதனின் வாழ்வுமுறை ஒரு ஒழுங்கு அமைக்கப்படாத விலங்கின வாழ்வாக இருந்தமையால் அது குழப்பம் நிறைந்த வாழ்வாகவே இருந்திருக்கிறது. இதனால் அவர்கள் மத்தியில் வாழ்ந்திருந்த சில தெளிந்த சிந்தனை உடையவர்கள் மக்களின் வாழ்வைச் சீரமைப்பதற்காக சில இயற்கையின் தத்துவங்களை மையக்கருவாக வைத்து, அன்போடு கூடிய அமைதியான வாழ்விற்குரிய வாழ்க்கை நெறிகளை எடுத்துக் கூறித், தங்கள் தங்கள் பிரதேச மக்களை ஒரு அணியின் கீழ் கொண்டு வந்தார்கள்

இவ்விதம் வெவ்வேறு போதகாசிரியர்களால் வெவ்வேறு பிரதேசச் சூழல்களில், வெவ்வேறு மொழிகளில் போதிக்கப்பட்ட வாழ்க்கைக்குரிய நெறி முறைகளே, காலப்போக்கில் சைவம். ஸ்லாம், கிறிஸ்துவம், இந்துத்துவம், வைஸ்ணவம், பௌத்தம், சமணம் எனப் பல்வேறு சமயங்களாக வடிவெடுத்தன.

இதனால் முதலில் மனித குலமாக இருந்த மானிடம், அதன்பின் பிரதேச வாரியாக, மொழியால் இனம் காணப்பட்டுப் பல இனங்களாகப் பிரிந்தன. அதன் பிற்பாடு மானிட வாழ்க்கையை ஒழுங்கமைக்கவென உருவாக்கப் பட்ட சில வழிமுறைகளாகிய சமயங்கள். கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டதுபோலப் பல இனங்களாகப் பிரிந்திருந்த மக்களிடையே சமூகங்களென்னும் பல பிரிவினைகளை உருவாக்கிவிட்டன.

உதாரணமாக இந்தியா இலங்கை போன்ற சில நாடுகளைப் பார்க்கும்பொழுது , இங்கே இப்பிரதேச சூழல் சுகாத்தியத்திற்கமைய முகிழ்ந்த தரை (மொகஞ்சதாரோ) தொடக்கம் குமரிக் கண்டம் வரை, தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட திராவிட இனம் இயற்கையோடு இசைபட வாழும் சைவ நெறிமுறையோடு வாழ்ந்திருந்ததாகப் 10000 ஆண்டிற்கு முந்திய பல பழம் வரலாறுகள் கூறுகின்றன.

இந்த வரலாறுகளை நாம் நுணுகி ஆராய்வோமானால் அதில் வெப்ப வலையங்களில் வாழ்ந்திருந்த மக்கள் பயிர்ச் செய்கை. மீன்பிடி போன்ற சீவன உபாயத்திற்குரிய தொழில்களுக்காகப் பள்ளத் தாக்குகளிலும் ஆற்றோரங்களிலும் கூடிவாழும் சந்தற்பம் உருவாகி அதனால் அவர்கள் ஓரிடத்தில் நிலைத்து வாழ முற்பட்டதால் அவர்கள் மத்தியில் வீடு கட்டும் கலை, சட்டி பானை செய்யும் கலை மற்றும் தங்கள் தொழில்களுக்கு வேண்டிய உபகரணங்கள் செய்யும் கலை போன்ற பல கலைகளும், நாகரீகமும் ஆரம்ப காலத்தில் வெப்பவலைய மக்களிடயேதான் தோன்றி யுள்ளதாகத் தெரிகிறது.

அதே சமகாலத்தில் குளிர்ப் பிரதேசங்களில் வாழ்ந்த மக்களின் வாழ்வுப் பண்புகளைப் பார்க்கும்பொழுது, அவர்கள் அப்பிரதேசங் களின் கடும் குளிர், பனி மற்றும் உணவு தானியம் உற்பத்தி செய்ய முடியாத காலச் சூழல் காரணத்தால், குகைகளில் வாழ்ந்து கொண்டும், வனவிலங்குகளைக் கொன்று அவற்றைத் தமது உணவாக உண்டு வாழ்ந்து இருக்கிறார்கள்.

இவர்களின் பிரதேசங்களில் கடும் குளிர் நிலவும் காலங்களிலும், அவர்களின் உணவிற்குரிய விலங்கினங்கள் அருகி வரும் வேளைகளிலும், காலத்திற்குக் காலம் இவர்கள், பிரதேசம் விட்டுப் பிரதேசம் வெப்ப வலையமாகிய தெற்கு நோக்கி இடம் பெயர்ந்து வாழ முற்பட்டிருக்கிறார்கள்

இவர்களின் இப்படியான நிலையற்று அலைந்து திரியும் வாழ்கைமுறை ஐரோப்பா வின் வடபிரதேசத்தில் உள்ள வொல்கா நதிப்பிதேசத்திலிருந்து, இந்தியாவின் வடபிரதேசத்தில் உள்ள கங்கை நதிப் பிரதேசம் வரை 6000-ம் ஆண்டுகாலமாக நிகழ்ந்திருக்கிறது. வால்கா பிரதேசத்திலிருந்து புறப்பட்ட செம்பட்டை நிறமும், செம்படை ரோமமும், நீலக் கண்களையும் உடைய இந்தோ ஐரோப்பியர் என்னும் ஓர் இனம் அதன் தென்கிழக்கு நோக்கிய நகர்வின்போது காலத்திற்குக் காலம் வெவ்வேறு இனங்களோடு கலந்து கரைந்து இந்தோ ஈரானியர், இந்தோ பர்சியர். இந்து ஆரியர் எனப் பல வேறு இன வடிவங்களாக மாறியிருக்கின்றன. இவர்கள் ஆரண்யர் அல்லது ஆரியர் என அழைக்கப்பட்டனர்.

இப்படியாக மாறுதலடைந்த இந்து ஆரிய இனமக்களே கி.மு. 2000-ம் ஆண்டளவில் கங்கை நதியோரமாக வந்து இந்தியாவிற்குள் புகுந்தனர். இவர்களின் வருகைக்குப் பின்புதான், திராவிடர்களின் சைவ நெறிக்குள் இந்தோ ஆரியர்களின் இந்துத்துவக் கருத்துக்கள் புகுத்தப் பட்டு, இந்து சமயம் உருவாகியிருக்கிறது. இதுபோலவே காலத்திற்குக் காலம் மொகலாயர்கள் வந்தபோது நம் மக்கள் மத்தியில் ஸ்லாம் புகுத்தப்பட்டது, ஆங்கிலேயர் வந்த காலத்தில் கிறிஸ்துவம் புகுத்தப்பட்டது. இவ்விதம். பிற இனங்களால் எமது தமிழ் இனத்திடை காலத்திற்குக் காலம் புகுத்தப்பட்ட வெவ்வேறு சமயங்களால் தமிழ் இனம் இன்று வெவ்வேறு சமூகங்களாகப் பிரிந்து நிற்கிறது.

இதனால் தமிழ் இனம் தனது தனித்துவமான இன அடிப்படையில் சுதந்திரமாக வாழ முயலும்பொழுது இந்தச் சமயத்தால் பிரிந்து நிற்கும் சமூகங்கள் தாங்கள் தம்மை ஓர் வேறு இனமாகக்கூறித் தடைக்கல்லாக நிற்கின்றன. மேலும் தமிழினத்தின் வழங்கப்படைத் தத்தவமாம் சைவத்தின் தாற்பரியத்தைச் சற்றும் அறியாதவர்கள், தங்கள் சுயநலனிற்காகவும் புகழுக்காகவும், அரசுகளைத் திருப்திப் படுத்துவதற்காகவும், சைவத்தைப் பின்பற்றும் தமிழினத்திடையே ஆரியர்களின் இந்துத்துவத்துக்குப் பெருவிழா எடுக்கிறார்கள்


இன்று தமிழினத்தின் விடுதலைக்குப்பெரும் தடைக்கல்லாக இருக்கும் இந்தியாவின் இந்துத்துவத்திற்கு இலங்கையில் தமிழன் விழா எடுப்பதைப் பார்க்கும்பொழுது, எமது பழந்தமிழ் அரசர்களும், கல்விமான்களும், இதே தவறைத்தான் செய்திருக்கிறார்கள் என்பதை நாம் நினைவு கூர்ந்து இவ்வித தவறுகளை நாம் தவிர்க்க முயலவேண்டும்.

**தமிழ் இனம் தனது தனித்துவமான இன அடிப்படையில் சுதந்திரமாக வாழ முயலும்பொழுது இந்தச் சமயத்தால் பிரிந்து நிற்கும் சமூகங்கள் தாங்கள் தம்மை ஓர் வேறு இனமாகக்கூறித் தடைக்கல்லாக நிற்கின்றன.**



# USHANI
## Caterers


**Excellent Quality Food Products for Supermarket Chains in the UK & Europe**





Specialist in North/South Indian, Sri Lankan, Chinese & Thai Cuisine
Noon House
34-38 Steele Road, Park Royal, London NW10 7AS
**Tel: 020 8838 4757 Mob: 07867 911 591**
**0800 195 99 75**
www.ushanicaterers.com





**Free Surprise Dish for Every Catering Orders**

எமது உணவு வகைகள் அனைத்தும் அதியுயர் சுகாதரமுறைப்படி தயாரிக்கப்படுகிறது

நீங்கள் விரும்பும் உணவு வகைகளுடன் அரங்கேற்றம், கல்யாணம் போன்ற வைபவங்களுக்கு தேவையான அழைப்பிதழ், மண்டப அலங்காரம், வீடியோ, போட்டோ, போன்ற ஏனைய தேவைகளும் உங்கள் மனமகிழ்வுக்கு ஏற்ப செய்துதரப்படுகிறது.



# அம்பாள் ஜுவல்லர்ஸ்

- உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் உயர்ரக டிசைன்கள் உங்கள் எண்ணத்தை நிஜமாக்கி ஜெலிக்க வைக்கும் நேர்த்தியான தங்க நகைகள்
- கலை வண்ணத்தைப் பிரதிபலிக்கும் புத்தம் புது நகைத் தேர்வுகள்
- நெஞ்சில் இன்பத்தை விளக்கேற்றும் தங்க நகை அரங்கம் அம்பாள் ஜுவல்லர்ஸ்



Ambaal Jewellers
176 Upper Tooting Road
Tooting
London SW17 7ER
**Tel: 020 8672 9955**
**Fax: 020 8672 7097**



**Life in the UK பரீட்சை உதவி வகுப்புகள்**
# Lewisham

பிரித்தானிய குடியுரிமை பெற Life in the UK என்னும் பரீட்சையில் சித்தி அடைந்து இருக்கவேண்டியது அவசியமாகும். இதற்கான வகுப்புகள் லூசியத்தில் (Lewisham) இரு இடங்களில் நடைபெறுகின்றன.

ஒவ்வொருவரின் கற்றல் திறமைகளும் வேறுபடுவதால் அவரவர் ஆற்றலுக்கு ஏற்ப வகுப்புகள் நடைபெறுகின்றன. கணனியில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. உங்களுக்கு வசதியான நேரத்தை தெரிவுசெய்து தனி வகுப்புகளை ஒழுங்கு செய்து கொள்ளலாம். துரித மிட்டல் வகுப்புகளும் உண்டு. விரும்பினால் உங்களுக்கு தேவையான பகுதியை மாத்திரம் படித்துக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: பிரபா Tel: **07749 051 394**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேது கால்வாய்: இலங்கையுடன் சேர்ந்து சதி செய்வோரை வெல்வோம்: முதல்வர் கருணாநிதி

இலங்கையுடன் சேர்ந்து சேது சமுத்திரத் திட்டத்தை தடுக்க முயலுவோரின் சதிச் செயல்களை முறியடித்து அந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவோம் என்று முதல்வர் கருணாநிதி கூறியுள்ளார்.
ஈரோட்டில் திமுக முப்பெரும் விழா நேற்று நடந்தது. அதில் கலந்து கொண்டு முதல்வர் கருணாநிதி பேசுகையில்,

திராவிட இயக்கத்தை வீழ்த்துவதற்காக நடைபெறுகின்ற முயற்சிகளில் ஒன்றாக நாம் நிறைவேற்ற இன்றைக்கு முனைந்திருக்கின்ற ஒரு பெரிய திட்டத்தை குழி தோண்டிப் புதைக்க சில குள்ளநரிகள், சில சூழ்ச்சிக்காரர்கள், சில குடிலர்கள் முயற்சி மேற்கொண்டிருப்பதை நம்முடைய இனமானப் பேராசிரியர் அன்பழகன் விளக்கமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

சேது சமுத்திரத் திட்டம் பற்றி உங்களுக்கு தெரியும். அந்தத் திட்டத்தை நிறைவேற்ற நாங்கள் பட்டபாடும் உங்களுக்கு தெரியும். சேது சமுத்திர திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக அண்ணா முதல்வராக இருந்த போது எழுச்சி நாள் நடத்தினார்.

நாம் நம்முடைய தேர்தல் அறிக்கைகளிலே எல்லாம் சேது சமுத்திரத் திட்டத்தை வலியுறுத்தினோம். அப்படி வலியுறுத்தி, நம்முடைய நல்ல காலமோ அல்லது தமிழ்நாட்டு மக்களுடைய நல்ல காலமோ. இந்தியாவின் தலைமைப் பொறுப்பில் டாக்டர் மன்மோகன்சிங்கும், காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி அம்மையார் பொறுப்பேற்றது முதல் அவரிடம் வாதாடி, வலியுறுத்தி பல விளக்கங்களை கொடுத்தோம்.

இந்தத்திட்டம் நிறைவேறினால் எவ்வளவு தொலைவு பயணம் மிச்சமாகும். இலங்கையை சுற்றிக் கொண்டு போகின்ற நேரம் மிச்சமாகும். நம்முடைய வாணிபம் வெளிநாடுகளில் எப்படி பரவும், வெளிநாடுகளுக்கும், திராவிடத்துக்கும் உரிய அந்தக் கால தொடர்புகள் மீண்டும் வருமா வராதா என்ற விளக்கங்களை எல்லாம் அவர்களுக்கு அளித்து, அதனை நிறை வேற்றுகின்ற அனுமதியை மத்திய அரசு நமக்கு தந்தது.

ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் செலவழித்து தமிழகத்தினுடைய, தென்னகத்தினுடைய பொருளாதாரம் முன்னேறினால் இந்தியாவின் பொருளாதாரமும் வளரும் என்ற நோக்கத்தோடு அமைக்கப்பட்டுள்ள அந்தத் திட்டத்திற்கான அனுமதியை பெற்று அந்தப்பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இலங்கைக்காரன் ரகசியமாகச் சொன்னானோ என்னவோ, இந்த திட்டம் நிறைவேறினால் எங்களுக்கு கஸ்டம், தமிழ்நாடு முன்னேறி விடும் என்ற பயத்தின் காரணமாக இலங்கைக்காரனின் ரகசியப் பேச்சைக் கேட்டோ அல்லது தமிழகம் எந்த காலத்திலும் இனி வளம் பெறக்கூடாது, இது தரைமட்டமாக வேண்டும் என்கின்ற கொடுங்குணத்தின் காரணமாகவோ இந்த திட்டத்தைத் தடுக்க ஒரு ஆளை பிடித்தார்கள்.

யார் அவர்? அவர் பெயர் ராமராம். 17 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்தாராம். அந்த ராமர் கட்டிய பாலம் அங்கே உள்ளது. அதை தொடாதே என்கிறார்கள். யார் ராமன்? எந்த பொறியியல் கல்லூரியிலே படித்து பொறியாளராக பட்டம் பெற்றவன்? எப்போது பாலத்தை கட்டினான்? ஆதாரங்கள் உண்டா? கிடையாது.

தமிழ்நாட்டு மக்கள், பொதுவாக, இந்திய மக்கள் கடவுள் நம்பிக்கை உடையவர்கள். அவர்களிடத்திலே எதையும் சொல்லலாம், அவர்கள் எதையும் நம்புவார்கள். அந்த நம்பிக்கையை வைத்தே அவர்களின் கழுத்தை அறுத்து விடலாம். இந்த நம்பிக்கை இருக்கின்ற காரணத்தினாலே தான் இன்றைக்கு இந்தியாவில் நரபலிகள் நடைபெற்று கொண்டிருக்கின்றன.

இன்றைக்கு பால்ய விவகாரங்கள் நடப்பது இந்த மூட நம்பிக்கையினால் தான். கணவன் இறந்தால் அவனோடு சேர்ந்து உடன்கட்டை ஏற்றுகின்ற பழக்கம் இன்னமும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.
அப்படிப்பட்ட மூட, மடத்தனமான, மத வாதங்களை இன்றைக்கும் மக்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையின் காரணமாக ராமன் பெயரை இழுத்து அவர்கள் இன்றைக்கு நம்மோடு விளையாடுகிறார்கள்.

ஏறத்தாழ நூற்றாண்டு காலக் கனவாகவும், திராவிட இயக்கத்தின் தனிப்பெரும் கோரிக்கைகளில் ஒன்றாகவும் இருந்து வந்த சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற இன்றைய மத்திய ஆட்சியின் பிரதமர் மன்மோகன்சிங்கும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தியும் பேருதவி புரிந்து இந்த திட்டத்தை நிறைவேற்ற முன்வந்துள்ள நிலையில் அதனைக் கெடுத்து தென்னக மக்களுடைய பொருளாதார வளம் பெருகிட ஒரு சில மதவாத அமைப்புகள் குறுக்கே நிற்பதற்கு, மத்திய அரசு அஞ்சி அதற்கு இடம் தரக்கூடாது. மதவாத மூட நம்பிக்கைகளை வேரோடு களையப் போரிட்ட ஈரோடு தந்த வள்ளல் பெரியார் பிறந்த மண்ணிலேயிருந்து இந்த மாபெரும் கூட்டத்தின் வாயிலா தென்னக மக்களின் சார்பில் குரல் கொடுக்கிறோம் என்பதை தீர்மானமாக நிறைவேற்றுகிறோம்.
இதை மத்திய அரசின் கவனத்திற்கு கொண்டு வருகிறோம். இந்த தீர்மானத்தை மத்திய அரசு மதித்து நடக்க வேண்டும். தமிழ் மக்களும் இந்தியாவின் ஒரு பகுதியினர் தான் என்பதை எண்ணிப் பார்த்து மத்திய அரசு செயல்பட வேண்டும்.
என்றார்.

நன்றி: தினத்தந்தி

இவ் உரை சர்ச்கையைக் கிளப்பியுள்ளது. திருவள்ளுவர் எந்த பல்கலைக்கழகத்தில் தமிழ் படித்தார் என்றும், மதுரையை கண்ணகி எப்படி எரித்தாள் என்றும் கேள்விக் கணைகள் எழுந்துள்ளன.!


தயாராகிறது! எழுதுங்கள் !!

## எழுத்தாளர் விவரத்திரட்டு ( பிரித்தானியா)

**ஈழத்து எழுத்தாளர்களின் (பிரித்தானியா) பெயர், புனைபெயர், பிறந்த இடம், பிறந்த திகதி, கல்வித்தகமை, தொழில், ஆக்கங்கள் வெளிவந்த சஞ்சிகைகள், வெளியிட்ட நூல்கள், பதிப்பித்த நூல்கள், முகவரி, மின்னஞ்சல், கிடைத்த விருதுகள், போன்ற விபரங்களை தந்துதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.**

தொடர்புகளுக்கு:
முல்லை அமுதன்
34 Redriffe Road Plaistow, London E13 0JX


## தாய்மொழியே.... (1ம் பக்க தொடர்ச்சி)

குறைவினால் சிசுக்கள், குழந்தைகளின் மரணவீதம் பெருகிக்கொண்டே போகின்றது. தொற்றுவியாதிகளும், புதுவிதநோய்களும் மனித சமுதாயத்தை வாட்டுகின்றன.
யுத்தத் கெடுபிடிகள், வறுமை, மனப்பதற்றம் போன்ற காரணங்களால் பல மக்கள் உளரீதியாகப் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள். கொலை, களவு, பாலியல் வல்லுறவு, போதைப்பொருள் பாவனை, சிறுவர் துஷ்பிரயோகம், விபசாரம் போன்றவற்றின் பெருக்கம் எல்லா நாடுகளையும் தொற்றி நிற்கிறது. அமைதியின்றி மனிதன் அலைகின்றான். இத்தகைய சூழலில் கல்வியில் எப்படி உண்மையான நாட்டத்தை எதிர்பார்க்க முடியும். நல்ல அமைதியான சூழல் கிடைக்காதபோது மனிதனால் அறிவை எப்படித் தேட முடியும்.
இவற்றுக்கும் மேலாகக் கோளமயமாக்கலும் பல்தேசியக் கம்பனிகளின் வருகையும் கல்வியை மேலும் சீரழித்துக் கொண்டிருக்கின்றன. கோளமயமாக்கலின் எதிர் விளைவுகள் தாய்மொழிகள் மீதான சந்தேகங்களை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளன. கல்வியியல் நோக்கில் தாய் மொழியின் விசைப்பாடுகளை அறியத்தவறிவிடுமளவுக்கு கோளமயமாக்கல் எதிர் விசையின் அழுத்தங்கள் எழுகை கொண்டுள்ளன. மனித மூளையின் ஆற்றல்களை ஆராய்ந்து வரும் உளவியலாளர்கள் பல மொழிகளைக் கற்றுக் கொள்ளக்கூடிய திறனும், கொள்ளளவும், ஆற்றலும் அதற்கு உண்டு என்பதை வலியுறுத்தியுள்ளனர். நவீன கற்பித்தல் முறையியல்களைப் பயன்படுத்தி மொழிகளைக் கற்பிக்கும் செயற்பாடுகள் வளர்ச்சியடையும் போது பாடசாலைகள் “மொழித் தொழிற்சாலைகளாக” மேலெழுகை கொள்ளும் நிதானமாக நோக்கும்போது, தாய்மொழியின் நிராகரிப்பு கல்வியின் நிராகரிப்பு ஆகின்றது, என்கிறார் பேராசிரியர் சபா ஜெயராசா.

ஒலிக்குறியீடுகளினாலும் எழுத்துக் குறியீடுகளினாலும் மொழி ஆக்கம் பெறுகின்றது. ஒலிக்குறியீடுகளைக் கொண்ட பேச்சு, மொழியே காலத்தால் வெகுவாக முந்தியது. ஆற்றலும், அனுபவங்களும், ஒருதலைமுறையினரிடமிருந்து இன்னொரு தலைமுறையினருக்குக் கையளிக்கப் படுவதற்கு மொழியே துணைநிற்கின்றது. சிந்தனையை இயக்கவும், நெறிப்படுத்தவும் மொழியே கருவியாகி நிற்கின்றது. நினைவுப் பதிவுகளுக்கும், அவற்றை மீட்டெடுத்தலுக்கும் மொழியே துணைநிற்கின்றது.

சமூகக் கருவியாக விளங்கும் மொழி ஒருவரைச் சமூகத்தோடு இயைபு கொண்டு வாழவைக்கும் செயல்முறையிலே பங்கு கொள்கின்றது. சமூக உறவு முறைகளை அறிவுறுத்துதல், சமூக வகிபங்குகளை ஏற்பதற்கு உதவுதல், சமூக நியமனங்களை அறிந்து கொள்வதற்குக் கருவியாதல், சமூகப்புலக்காட்சியைத் தோற்றுவித்தல் முதலிய பல்வேறு தொழிற்பாடுகளும் மொழியின்றி நிகழமாட்டா.

கற்றுக் கொள்ளப்பட வேண்டிய தேவையைக் கொண்டதே மொழி. வரன்முறை சார்ந்த வகையிலும் வரன்முறை சாரா வகையிலும் மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. கற்றுக் கொள்ளும் செயற்பாட்டில் தாய் மொழியே வேற்று மொழிகளிலும் வாய்ப்பான நிலையில் அமைந்திருக்கும். குழந்தைகளினால் முதலிலே பேச்சு மொழியே கற்றுக் கொள்ளப்படுகின்றது. தாய்மொழியே சிந்தனைக்குரிய வலுவான அடித்தளத்தை அமைக்கின்றது. உளப்படிமங்களை உருவாக்கிக் கொள்வதற்கும் பேச்சு மொழியே ஆரம்ப நிலைத்தளமிடுகின்றது. கேட்கும் செயற்பாடு பேச்சு மொழியை வளம்படுத்துவதற்குரிய ஒலிப்படிமங்களை உள்ளத்திலே உருவாக்குகின்றது. வரன் முறையான கல்விச் செயற்பாடுகளுடன் வாசிப்பும் எழுத்தும் வளர்ச்சியடையத் தொடங்குகின்றன. ஒலிப்படிமங்களுக்கு எழுத்துவடிவம் கொடுத்தல், படிப்படியாக வளர்ச்சியடையத் தொடங்குகின்றது. ஒலிக்குரிய எழுத்துக்களைத் தெரிவு செய்தல், நிறுத்தற் குறியீடுகளைப் பயன்படுத்துதல், எழுத்து வினைப்பாட்டுக்குரிய ஆற்றல்களைப் பெறுதல் முதலியவை கற்றுக்கொள்ளப்படும் செயற்பாடுகளாகின்றன. கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகியவை ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டு நிற்கும் அடிப்படை மொழித்திறன்களாகும். அறிவைத் திரட்டிக் கொள்வதற்கு இவைகளே அடிப்படைகளாக அமைகின்றன.


# EASTERN CLINIC

## Natural Medicine Centre

**தேவையற்ற உடற் பருமனைக்குறைக்க...**
**புதிய விஞ்ஞான பூர்வமான சிகிச்சை**

- உடனடியான பருமன் குறைவு
- எடை குறைவு அதிகரிப்பு
- கொழுப்பையும் தேவையற்ற ஊளைச்சதையை குறைக்க
- இடை, தொடை மெலிவடைய

**இயற்கை மருத்துவ நிலையம்**
**ஈஸ்டன் கிளினிக்**
**Dr.என்.எஸ் மூர்த்தி**
**இயற்கை மூலிகை மருத்துவம்**
**சீன அக்குபங்சர் சிகிச்சை**

- கோமியோபதி
- மன உளைச்சல்
- தோல் வியாதிகள்
- தலை முடி
- முதுகு வலி
- உதிர்தல்
- மூட்டு வாதம்
- உடற் பருமன்
- தலைவலி



சிகிச்சைக்கு முன்



சிகிச்சைக்கு பின்

**ஆண் பெண் இருபாலாருக்கும் பெண் மருத்துவர் அளிக்கும் சிகிச்சை**

**1079 Garratt Lane**
**Tooting. London SW17 0LN**
**Tel: 020 8682 3876**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை நூல் வெளியீடு

கவிஞர் வேலணையூர் பொன்னண்ணாவின் “நெஞ்சத்து நெருப்பு” கவிதை நூல்


பொன்னண்ணா - யோகநாதன்

வெளியீட்டு விழா சென்ற மாதம் 15-ம் திகதி, எஷர் என்னும் இடத்தில், கிஞ்சிலி வுட் பாடசாலை மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.
தியாகதீபம் திலிபன் நினைவரங்கம் என்று பெயரிடப்பட்டு அமைக்கப்பட்ட மேடையில் நூல் வெளியீடு நடைபெற்றது. இவ் வெளியீட்டு விழாவை இலண்டன் இலக்கிய மன்றமும், வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினரும் இணைந்து ஒழுங்கு செய்திருந்தனர்.

நூல் வெளியீட்டு விழா சுதுமலைக் கவிஞர் கந்தையா இராஜமனோகரன் தலைமையில் நடைபெற்றது. செவாலியர் அமுதுப் புலவர், கவிஞர்.மு.து.செல்வராஜா, எழுத்தாளர் திருமதி.நவஜோதி யோகரட்ணம், பண்டிதர் ச.அப்புத்துரை, ஆகியோர் நூலாசிரியரின் கவித்துவத்தையும் நற் பண்புகளையும் பாராட்டி உரையாற்றினர். நூல் வெளியீட்டுரையை நூலகவியலாளர் என்.செல்வராஜா வழங்கினார்.

“ஓ..வண்டிக்காரா” புகழ் பாடகர் மா.சந்திய மூர்த்தி நூலாசிரியரின் மாவீரர் பாடல் ஒன்றிற்கு மெட்டமைத்து மிகவும் இனிமையாக பாடி சபையோரை மகிழ்வித்தார்.
கிங்ஸ்ரன் முன்னாள் நகரபிதா யோகன்



யோகநாதன் பொன்னண்ணாவின் தமிழ் உணர்வைப் பாராட்டி கிங்ஸ்ரன் நகரசபை சார்பில் சான்றிதழ் வழங்கினார். சுடரொளி ஆசிரியர் ஐ.தி.சம்பந்தன், புதினம் ஆசிரியர்


இராஜமனோகரன்

ஈ.கே.இராஜகோபால் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.
நூல் வெளியீட்டின் பின் நடன நிகழ்ச்சி நடைபெற்றது. நடன நிகழ்ச்சி நடைபெற்ற வேளை இரவு போசனம் வழங்கப்பட்டதால், நடனநிகழ்ச்சி சோபை இழந்தது பார்வை யாளர்கள் கவனம் திசைமாறியது பலரையும் சங்கடத்திற்கு உள்ளாக்கியது. தலைவர் தனது உரையில் கூறியதுபோல், தமிழ்மக்களின் நிகழ்வுகள் குறிப்பிட்ட நேரத்தில் ஆரம்பிக்கப்படவேண்டும் என்பது நாம் எல்லோரும் கவனத்தில் எடுக்கவேண்டிய முக்கிய விடயமாகும்.
கவிஞர் பொன்னண்ணா தமிழ் மண்ணை நேசிக்கும் பண்புமிக்க மனிதர் என்பதற்கு அவரது கவிதைகளும் தியாகி திலீபன் நினைவரங்கமும் சான்று பகர்கின்றன. அவர் தொடர்ந்தும் தாய் மண்ணைநோக்கிய கவிதைகளை கொண்டவர வாழ்த்துக்கள்.

உங்கள் அபிமான
வடலியை இப்பொழுது
இணையத்திலும்
பார்வையிடலாம்
www.vadalee.com

## யோகர் சுவாமிகளுடன்.... (3ம் பக்க தொடர்ச்சி)

குப்புறப்படுத்து அட்டாங்கமாக வணக்கம் செய்தான்!.
ஒரு கணம் திணறிப் போனேன். ‘இந்தக் காலத்தில் இப்படியும் ஒரு பண்பாடா?’ என்று. இது இருக்க ....
நான் யோகர் சுவாமியை வணங்கி எழுந்ததும் ‘என்ன பெயர்?’ என்று அவர் கேட்டார். நான் ‘வரதராசா’ என்று மிக அடக்கமாக எனது பெயரைச் சொன்னதும், அவரே தம் முன்னாலிருந்த தட்டிலிருந்து கொஞ்சம் கற்கண்டை எடுத்து என்னுடைய கைகளில் தந்தார். பிறகு, ‘நீ பின்னுக்கு நல்லாயிருப்பாய்’ என்று ஒரு வாழ்த்தும் சொன்னார். அந்த யோகர் சுவாமி இப்போதும் என் நினைவில் இருக்கிறார். அந்த ஒரு நிகழ்ச்சிக்குப் பிறகு அப்பாவுக்கும் யோகர் சுவாமிக்குமிடையே எவ்வித தொடர்பும் இருந்ததில்லை!. மீண்டும் யோகரிடம் அப்பா போனதில்லை. ‘அவரிடம் எனக்கு அலுவலில்லை’ என்று கருதியிருக் கலாம்.
அப்பாவின் ஒற்றைத்திருக்கல் மாட்டு வண்டிக் கூடாரத்தின் ஒரு பக்கத்தில் ஒரு சிறிய ‘போட்’ பலகை இருக்கும். அதில் ‘தி. சண்முகம், தொல்புரம், கமம்’ என்று மூன்று வரிகள் எழுதியிருக்கும். ஆனால் அப்பாவுக்கு கமம் (விவசாயம்) இருந்ததில்லை. அந்தக் காலத்தில் விவசாயத் தேவைக்கான வண்டிகளுக்கு வரி விலக்கு இருந்திருக்க வேண்டும். அதனால் எல்லா வண்டிக்காரர் களுமே தங்கள் வண்டியில் ‘கமம்’ என்றுதான் எழுதியிருப்பார்கள்! அப்படி எழுதுவதை ஒரு தவறாக யாரும் கருதுவதில்லை.

அப்பாவின் ஊரும் ‘பொன்னாலை’ தான். ஆனால் பொன்னாலைக்குரிய விதானையார் தொல்புரத்திலேயே இருந்தார். தொல்புரத்தில் ஒரு பகுதியாகவே பொன்னாலைக் கிராமமும் சட்டப்படி கருதப்பட்டது.
அப்பாவுக்குக் ‘கமம்’ இருக்கவில்லை. ஆனால் ஒரு ‘கடை’ இருந்தது. அந்தக் கடைக்குத் தேவையான பொருட்களை சங்கானை, கன்னாகம் சந்தைகளிலும், பெரியபட்டணத்திலும் (யாழ்ப்பாணம்) போய் வாங்கி வருவதற்காக அவருக்கு அந்த வண்டி தேவையாக இருந்தது. எப்போதாவது எங்கள் குடும்பம் கோயில்களுக்கோ, உறவினர் வீடுகளுக்கோ போய் வருவதற்கும் அந்த வண்டி உபயோகப்பட்டது.

K M A

# Perma
*International Shipping Ltd*

*Shipping & Airfreight Worldwide Destinations*
*Traveling & Ticketing*
*Import & Export*
*Packing & Crating*
*Collection & Delivery*
*All sizes &Weights*
*Immediate & Insurance Cover*
*Complete Documentation Service*

- இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூருக்கு விசேட கழிவு
- ஏற்றுமதி
- இறக்குமதி
- களஞ்சியப்படுத்துதல்
- ஒழுங்குகள் செய்தல் யாவற்றிற்கும்

திறந்த Car Park
பிரமாண்டமான களஞ்சியம்

உங்கள் பொருட்களை இங்கு வந்தும் Pack செய்துகொள்ளும் வசதி உண்டு
உங்கள் இல்லம் வந்து Collcect செய்யும் சேவை உண்டு

- உங்கள் தனிப்பட்ட பாவனைப்பொருட்கள்
- வாகனங்கள்
- வீட்டுப் பாவனைப்பொருட்கள்
- இயந்திர உபகரணங்கள்

**Over 35 Years Experience**

**Door to Door or Door to port service**

Web: www.permainternational.co.uk
E-mail: info@ permainternational.co.uk

*COLLECTION POINTS*
* *Milton Keynes*
* *North London*
* *East London*

இங்கிலாந்தின் எப்பகுதியாயினும் உங்கள் பொருட்களை எம்மால் சேகரித்து பாதுகாப்புடன் வைத்திருந்து அனுப்ப முடியும்

தாயகத்திற்கோ பிற நாடுகளுக்கோ பொருட்களை அனுப்ப விரும்புகிறீர்களா? தரமான, பிரத்தியேக சேவைக்கு நாடவேண்டிய இடம்

தொடர்புகளுக்கு............ மோகன், பேர்சி, சிவம்

**45C Crusoe Road, Mitcham, Surrey CR4 3AL**
**Tel: 020 8646 5222, Fax: 020 8646 5557, Mobile: 07939550397**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THINESH
## JEWELLERS & TEXTILES

# திணேஷ்
## ஜுவல்லர்ஸ் & டெக்ஸ்டைல்ஸ்



நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம்

# தீபாவளியை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை



மலிவு விலையுடன் பரிசுப்பொருட்களும் வழங்கப்படும்

ஆண்கள் பெண்களுக்கான நவநாகரீக ஆடைத் தேர்வுகளையும், பனாரஸ் – தங்கவேட்டை அரசி – சிவாஜி – பஞ்சாபி, பாம்பே சில்க் சாரி வகைகள், இன்னும் பலவிதமான புடவைகளையும், அன்பளிப்பு பொருள்களையும் உங்கள் எண்ணம் போல தெரிவுசெய்துகொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்.

£500 பவுண்களுக்கு மேல் தங்கநகை கொள்வனவு செய்வோருக்கு
£50 பவுண்கள் மதிப்புள்ள ஒரு புடவை இலவசம்.

£100 பவுண்களுக்கு மேல் ஆடைகள் கொள்வனவு செய்வோருக்கு 30% கழிவு

**“பட்டு என்றதும் பட்டென நினைவுக்கு வரவேண்டிய ஒரே ஒரு பட்டுமாளிகை”**

# Thinesh
## JEWELLERS & TEXTILES



**276, Lewisham High Street**
**Lewisham**
**London SE13 6JZ**
**Tel: 020 8613 9569**

லூசியம் shopping சென்ரறில் இருந்து ஆஸ்பத்திரி பக்கமாக 4-5 நிமிட நடைதூரத்தில் உள்ளது
(பழைய தங்கமாளிகை இருந்த அதே இடத்தில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# JK
# Gold & Fashion House

## 3வது ஆண்டு நிறைவுவிழா கொண்டாட்டமும் மாபெரும் மலிவு விற்பனையும்!



**திங்கள் 22/10/07 முதல்**
**ஞாயிறு 28/10/07 வரை**

உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறார்கள்
JK Gold House & Fashion House
தாபனத்தினர்

ஆண்கள் பெண்கள் சிறுவர்களுக்காக ஆடைகள் மலிவு விலையில்...

தங்க நகைகளும் மிக மிக மலிவு விலையில்...

மறந்துவிடாதீர்கள் மலிவு விற்பனை ஒரு வாரத்திற்கு மட்டுமே!

**JK Gold House & Fashion House**
**314-316 London Road**
**Croydon CR0 2TJ**
**Tel: 020 8684 4577**
**Fax: 020 8684 4677**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ்கற்கும் மாணவர் பக்கம் வாசகர் போட்டி

**பிள்ளைகளின் தமிழ் மொழி, தமிழ்த் தாயகஉணர்வு, பண்பாடு ஆகியவற்றை வளர்க்கக் கூடிய போட்டிகள், கட்டுரைகள், கவிதைகள் என்பனவற்றை இப்பத்திரிகை வரவேற்கின்றது.**

## சொற்களைத் தேடுதல்

கீழுள்ள எழுத்து வலையில் 64 சொற்கள் பின்னப்பட்டுள்ளன. இவை மேலிருந்து கீழ், கீழிருந்துமேல் , இடமிருந்து வலம், வலமிருந்து இடம் மூலைப்பக்கம் என நேர்கோட்டில் அமையும். நீங்கள் இவற்றைக் கண்டுபிடித்து வளையமிட்டுக் காட்டவும் .

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தா | ழ | ம் | பூ | ங் | கொ | டி | க | வி | ம | ம் | ட | ட் | கோ | செ |
| ழி | மா | ன | ற | எ | ல் | வ | ஓ | உ | தி | ப | வ | ன | ட் | ழி |
| சே | த | சி | வை | ள | டி | பா | ண் | டி | ய | ன் | சே | யூ | டை | ய |
| ன் | வி | ஞ் | ள் | க | நெ | ற் | ம | டு | ம் | இ | ள | ங் | கோ | ன் |
| தே | ல் | வ | ல் | ரு | அ | க | இ | ல் | ல | ற | ம் | லி | வ | ஞ் |
| வ | த | வ | ப் | க | ம | ட | ந் | தை | வி | சோ | ற் | ச | ல | ஆ |
| ர் | கா | பு | த் | லை | இ | ல் | தி | த் | ஆ | கை | ழ | மு | ன் | பி |
| ட | ம் | தி | ப் | அ | கு | ம் | ர | க | ந | ர | சி | ன் | ன | ம் |
| வே | ய | பு | ம | கு | ன | ங் | ன் | மு | வு | ளா | ம் | ல | வு | தே |
| ர் | வை | ல | து | ன் | ப | ம் | கொ | த் | வி | ந் | ன் | ச | ம் | பு |
| யூ | ர | வ | அ | ங | ற | த் | டு | து | ரி | ர | தி | லு | மை | ப் |
| றை | கு | ர் | ளி | க | ம | ம் | தி | வி | சே | த | ரு | கி | ரு | க |
| உ | ம் | வ | வ | மு | ஓ | து | கா | ளி | ந் | தி | ம | ண | பெ | மு |
| உ | ப | ளி | ளை | கை | ளி | மா | ரை | ரு | ழ | த | க | ள் | ளி | ர் |
| நி | ம் | மு | ல் | க | ப | மு | அ | ல் | ன் | வ | ள் | க | சி | டை |

| | | | |
|---|---|---|---|
| மலைப்பு | பாற்கடல் | இந்திரன் | மடந்தை |
| பாண்டியன் | பகுப்பு | புலவர் | புகார் |
| காவல் | முனிவர் | இல்லறம் | நகரம் |
| துன்பம் | அன்னம் | காதல் | ஆகுதி |
| இன்பம் | வண்டு | வேம்பு | மகளிர் |
| ஆரம் | மன்றம் | அகத்தியர் | நெருப்பு |
| பனைவர் | வேடர் | மாளிகை | முற்றம் |
| தாழம்பூ | அகவை | பத்தினி | மதுரை |
| இளங்கோ | கழுத்து | கோட்டம் | மதியம் |
| திருமகள் | வஞ்சினம் | கவுந்தி | கோவலன் |
| குரவை | உறையூர் | வள்ளல் | அருந்ததி |
| கண்ணகி | பகல் | கொங்கு | செழியன் |
| கோட்டை | குவளை | கண்ணீர் | கள்வன் |
| பூங்கொடி | காவிரி | மாதவி | மல்லிகை |
| பெருமை | நிழல் | முகப்பு | கும்பம் |
| தெம்பி | தேவர் | சேரன் | சோழன் |

**பெயர்:** Write in Tamil ..........................................................................

**முகவரி:** Write in English ....................................................................

........................................ **தபாற் குறியீடு:**.......................................

**தொலைபேசி:**.......................................................................................

இம்மாத சொற்களைத் தேடுதல் போட்டியின் விடைகள் எமது அடுத்தமாத வடலியில் பிரசுரிக்கப்படும். போட்டியாளர்களில் இருவர் குலுக்கல்முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களின் பெயர் விபரங்கள் அடுத்த வடலியில் வெளிவரும்.


அத்துடன் இவ்விருவருக்கும் **Everest Curry King, Lewisham** ஸ்தாபனத்தார் தலா 10 பவுண் வவுச்சர்களை வழங்க உள்ளனர்.

இப் போட்டிக்கான விடைகள் இம் மாதம் **20ம் திகதிக்கு** முன் கிடைக்கும் படியாக கீழுள்ள முகவரிக்கு அனுப்பப்படல்வேண்டும்.

**Vadalee, PO box- 24783, London, SE13 7YE**

*சிறுவர்கள் தங்களின் தமிழ் அறிவை வளர்த்துக்கொள்ள இது உதவியாக இருக்கும் எனும் நோக்கில் ஆக்கப்பட்டுள்ளது. எனவே பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை இப் போட்டிகளைச் செய்யுமாறு ஊக்கப்படுத்துங்கள். உதவவேண்டாம்.*

## குறுக்கெழுத்துப் போட்டி – 75



இம்மாத போட்டியின் விடைகள் எமது அடுத்தமாத வடலியில் பிரசுரிக்கப்படும். போட்டி யாளர்களில் இருவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களின் பெயர் விபரங்கள் அடுத்த வடலியில் வெளிவரும்.

அத்துடன் இவ்விருவருக்கும் **Everest Curry King Lewisham** ஸ்தாபனத்தினர் தலா 10 பவுண் வவுச்சர்களை வழங்க உள்ளனர்

**பெயர்:** Write in Tamil ..........................................................................

**முகவரி:** Write in English ....................................................................

........................................ **தபாற் குறியீடு:**.......................................

**தொலைபேசி:**.......................................................................................

கீழ்கண்ட குறிப்புக்களைக் கொண்டு காலியாகவுள்ள இடங்களை சரியான சொற்களால் நிரப்பி அனுப்புங்கள். ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது. சரியாக நிரப்பி அனுப்பும் வாசகர்களில் குலுக்கல் முறையில் தேர்வுசெய்து இருவர் தலா 10 பவுண் வவுச்சர்கள் பரிசாக அளிக்கப்படும்.

**இடமிருந்து வலம்:**

1. பெண்கள் இடைப் பகுதியில் சொருகிக் கொள்ளுகின்ற புடவை மடிப்பு
3. இரண்டு பக்கமும் செதுக்கப்பட்ட ஒரு மரத்துண்டை அதே பருமனுடைய வேறொரு நீளமான கோலால் அடித்து அது போகும் தூரத்தை கணக்கிடும் சிறுவர் விளையாட்டு.
4. பிறப்பில் இருந்து இயற்கையாக உடலின் மேற்புறத்தில் காணப்படும் சிறு கறுப்பு நிற புள்ளி.
8. அம்மாவின் சகோதரன்.
5. காற்று நிரம்பிய உருண்டையான விளையாட்டுப் பொருள் (குழம்பியுள்ளது)
11.நெற்பயிரில் நெல்மணிகள் நிறைந்திருக்கும் பகுதி
14. அரசாங்க கொள்கை மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு எதிரானது எனக் கருதப்படும் பகுதிகளை திரைப்படம் போன்றவற்றில் இருந்து நீக்குதல்
16. தரக்குறைவான முறையில் பாலுணர்வினைத் தூண்டிவிடக்கூடியது

**வலமிருந்து இடம்**

6. காணிக்கையாக அளிக்கப்படும் பணம் அல்லது பொருள்
10. ஒரு எண்ணை இன்னொரு எண்ணால் வகுக்கும்போது கிடைத்திடும் வகுக்கும் எண்ணின் மடங்கு
13. கவர்ச்சியாக தன்னை அலங்கரித்துக் கொள்ளும் பெண்.
15. வடக்கு திசைக் காற்று. இது மணம் என்றும் பொருள்படும்

**மேலிருந்து கீழ்**

1. ஒன்றில் மாட்டத்தக்க வகையில் வளைவாக இருக்கின்ற உலோக இணைப்பு.
2. கடன் கொடுக்கப்பட்ட பணத்திற்கு குறிப்பிட்ட ஒரு காலத்தின் பின் மேலதிகமாக கொடுக்கும் தொகை
7. அரசியல் பொருளாதாரம் போன்றவற்றில் தீவிரமான போக்கினைக் கையாளாமல் மிதமாக செயல்படுவது என்ற கொள்கையை இவ்வாறு கூறலாம்.
9. இறைச்சி, அல்லது உடல் தசை எனலாம்
12. காலைவேளையில் பல்துலக்குதல், சிறுநீர் கழித்தல், குளித்தல் போன்ற உடலை தூய்மையாக்கும் வேலை.
13. கல்லில் செதுக்கிய அல்லது உலோகத்தில் உருக்கி வார்த்த உருவம்

**கீழிருந்து மேல்**

4.மோர் கடைவதற்கு உபயோகிப்பது.
5.பெருமளவில் கமம் செய்வதற்குத் தேவையான வயலையும் தோட்டத்தையும், கால்நடைகளையும், கொண்ட ஒருவரின் சொத்து.
8.பெட்டிகள் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படுகின்ற தாள்.
10. மற்றவர்களுக்காக தமது இனிய உயிர்களை கொடுப்பவர்களின் நினைவாக ஏற்றப்படும் நெருப்பு.

(கடந்த போட்டி முடிவுகள் 14ஆம் பக்கத்தில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிஞர் இரா. இரவியின் கைக்கூ கவிதைகள்

சாமி சாப்பிட ஆரம்பித்தது,
படைப்பதை நிறுத்தினார்கள்
பக்தர்கள்

உடல் சிதைந்த போதும்
வாசம் தருவது
சந்தனம்

கற்பை இழந்து
கண்ணகி ஆனாள்
திரைப்படத்தில்

கண்ணை மூடிக்
கடவுளை வணங்கினான்
கடவுளைக் காணவில்லை ...

கைக்கூ கவிதைகளை
முதுகில் சுமப்பவை
அணில்கள்

ஏறும் இறங்காது
ஒருவழிப்பாதை
விலைவாசி

சோகத்தின்
முன்னுரை
தாடி

அனுபவத்தின்
அங்கீகாரம்
நரை

இல்லாதபோது ஏங்கினாள் ....
இருக்கின்றபோது அனுமதிப்ப
தில்லை
நடிகையின் உடை

## சித்தர்கள் ஐக்கியம் அடைந்த இடங்கள்

1. திருமூலர் - சிதம்பரம்
2. சட்டை முனி - சீர்காழி
3. கும்பமுனி - கும்பகோணம்
4. அகத்தியர் - அனந்த சயனம்
5. போகர் - பழனி
6. கருவொளியார் - காஞ்சி
7. பாம்பாட்டியார் - திருஞாலம்
8. மச்சமுனி - திருப்பரங்குன்றம்
9. அகப்பேயர் - எட்டுக்குடி
10. கொங்கணர் - திருப்பதி
11. தன்வந்திரி - வைத்தீஸ்வரன் கோவில்
12. நந்தீஸ்வரர் - திருவாடுதுறை
13. இடைக்காரர் - திருவண்ணாமலை
14. கமலிமுனி - மதுரை
15. கருவூரார் - திருக்காளத்தி
16. புலத்தியர் - பாபநாசம்
17. அழுக்கண்ணர் - நாகப்பட்டினம்
18. காசிவர் - ருத்ரகிரி.

தொகுப்பு: வை.ரகுநாதன்

## ஆழப் பதித்துக் கொள்!

நெஞ்சில் துணிவைத் தேக்கிக்கொள் -உன்
நினைவில் தூய்மை சேர்த்துக் கொள்!
வஞ்சகம் இல்லா நட்புஎனில் -உன்
வாழ்நாள் முழுவதும் ஏற்றுக்கொள்!
பெற்றவர் சொற்கள் கேட்டுக்கொள் -வரும்
பயன்பல கோடி ஒப்புக்கொள்!
உற்றநல் உறவைத் தழுவிக்கொள் -பிறர்க்கு
உதவும் பண்பினை வளர்த்துக் கொள்!
உடல்நலம் தன்னைக் காத்துக்கொள் -உண்ணும்
உணவில் மிகவும் கவனம் கொள்!
படபடப் பெதிலும் கொள்ளாமல் -எங்கும்
பொறுமைக் காக்கும் பண்பைக் கொள்!
முடியாது எனும் ஒரு சொல்லை -உன்
மனதில் இருந்தே அகற்றிக் கொள்!
கடிதாய் இருப்பினும் கல்விதனை -உன்
கருத்தில் ஆழப் பதித்துக் கொள்!
தனித்த திறமைகள் கூட்டிக்கொள் -குற்றம்
சிறியதாய் இருக்கையில் கழித்துக் கொள்!
மனித நேயமே பெருக்கிக் கொள் -உன்
வாழ்வில் இலட்சியம் வகுத்துக் கொள்!

- ம.நாராயணன்

## அம்மா உங்களைத்தான்...

அம்மியிலே தூள் அரைத்த அம்மையெல்லாம்
மம்மியாய் தினம்மாறிப் புகலிடத்தில்
கம்மியாய் தமிழ் சிலவைச் சேர்த்தபடி
தம்மனையில் ஆங்கிலத்தில் சோரம் போனாள்.

மண் தனதை மறந்தபடி பேசுமிவள்
உண்பதற்கு முருங்கைக்காய் தேடுகிறாள்
கண் குளிர வல்லாரை சேர்க்குமிவள்
கண்மணிகள் தமிழ் பேசின் சீற்றம் கொள்வாள்.

தமிழ் பேசின் கௌரவமும் மதிப்பும் வீழும்
உமிழ் நீரை விளுங்குதற்கும் மறந்தே வாதம்
கவிழ்ந்துவிடும் உம் நினைப்பும் சிறிதே காலம்
அவிழ்ந்த தலை முடிப்பதற்கும் தமிழே தேவை.

உம் சிலரால் தமிழழிந்து விடுமென்றெண்ணின்
நம் தமிழ்க்கு அந்தாதி எதுவும் உண்டோ
எம் உறவாய் எண்ணியுமே சொல்வேன் உண்மை
மும்தமிழை மறந்துவிடா நினைவே வாழ்வாம்.

உன்னைப்போல் நானுந்தான் நினைத்தேன் அன்று
என்னையே மறந்திருக்க அவனும் சொன்ன
பொன்னைப்போல் வார்த்தைகளால் நானும் இன்று
என் வாழ்வை மாற்றிவிட்டேன் தமிழே தாயாய்.

த.சு.மணியம்.


## தந்தை பெரியார்



தந்தை பெரியார் 1879ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 17ம் நாள் பிறந்தார். தமிழ் மக்கள் நெஞ்சில் நிலைத்திருக்கும் இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தலைவர் தந்தை பெரியார் ஈ.வெ.ராமசாமி அவர்கள். 95 ஆண்டுகள் வாழ்ந்தார் என்றாலும், அவரது ஒவ்வொரு சொல்லும் செயலும் நாட்டிற்காகவே என்று எண்ணிப் பணியாற்றியவர். அறியாமையையும், மூடப்பழக்க வழக்கங்களையும் எதிர்த்துப் போராடியவர்.. தீண்டாமை ஒழிப்பில் தீவிரம் காட்டியவர். எதிரப்புக்கும், ஏளனத்திற்கும், மிரட்டலுக்கும், அடக்குமுறைக்கும் அஞ்சாமல், சமூக, பொது வாழ்விலும், பொருளாதாரத்திலும் மக்கள் யாவரும் சமத்துவமாய் வாழ வேண்டும் என்பதற்காக அல்லும் பகலும் அயராது உழைத்தவர்.

ஈரோடு நகர்மன்றத் தலைவர், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் போன்ற பதவிகளை வகித்தவர். "குடியரசு", "ரிவோல்ட்", "புரட்சி", "பகுத்தறிவு", "விடுதலை", ஆகிய இதழ்களை தோற்றுவித்தவர். ஜஸ்டிஸ் கட்சி, தென்னிந்திய நல உரிமைச் சங்கம் என்ற பெயரை திராவிடக் கழகம் என மாற்றி இயக்கமாக ஆக்கியவர். இந்தி எதிர்ப்பு, இன உணர்வு, பெண் கல்வி என இயக்கத்தின் கொள்கைக்காகவே வாழ்ந்து வரலாறானவர். வெளிநாட்டுப் பயணங்கள் பல மேற்கொண்டவர். கொண்ட கொள்கைக்காக பலமுறை சிறை சென்றவர். வைக்கம் வீரர், ஈரோட்டுச் சிங்கம், தன்மானத் தலைவர், பெரியார் என பல புகழ் மாலைகள் இவரைச் சேர்ந்து பெருமைப்பட்டன. பெரியார் 1973ஆம் ஆண்டு மார்கழி மாதம் 24ம் நாள் இவ்வுலகை விட்டு மறைந்தார்.

## பெரியார் குறித்த கவிஞர் காசி ஆனந்தன் கவிதை



பெரியார் ஒருவர்தான் பெரியார்
அவர் போல் பிறர் யார் அவர் பெருமைக்கு உரியார் - தந்தை
பெரியார்

பகைவர் தமை காட்டி வதைத்த கூர் ஈட்டி
தமிழர் புகழ்நாட்டி வாழந்த வழிகாட்டி - தந்தை பெரியார்

மாட்டைத் தீண்டுவான் ஆட்டைத் தீண்டுவான்
மனிதனைத் தீண்ட மறுத்தானே!

நாட்டை உலுக்கினான் பெரியார் அவர் தொண்டன்
நரிகளின் வாலை அறுத்தானே!

கோடை எழில் கொஞ்சும் பெண்களை உலகினில்
கொடியவன் கூட்டில் அடைத்து வைத்தான்!

காலம் காலமாய் அழுத பெண்களின் கண்ணீரை
கிழவன் துடைத்து வைத்தான் - தந்தை பெரியார்

மானம் கெடுப்பாரை அறிவைத் தடுப்பாரை
மண்ணோடு பெயர்த்த கடப்பாரை!

வானம் உள்ள வரை வையம் உள்ள வரை
யார் இங்கு மறப்பார் பெரியாரை - தந்தை பெரியார்


# RADIUS SERVICE LTD


For Sales, Service and Repairs of Commercial Refrigeration & Air-Conditioning

**உங்களின் அனைத்து குளிர்சாதன உபகரணங்களின் தேவை, மற்றும் பழுதுபார்த்தல் போன்றவற்றிற்கு நம்பிக்கையுடன் நாடவேண்டிய ஒரே இடம்**



- Shelving
- Chillers, Freezers
- Air Conditioning systems
- Shop Fitting
- Cold rooms etc.

* Remote Dairy Low Fronted
* Plug in Dairy
* Double Door Chillers
* Jumbo Freezers







Unit: 23-24 Resolution Way
London, SE8 4NT
Tel: 020 8692 0257 / 020 8694 2786


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூட்டுவீக்கத்திலிருந்து விடுபடுவது எப்படி ?

பல நோய்களுக்கான காரணத்தை அறிவியல் கண்டு பிடித்துள்ள போதிலும், கீல்வாதம் என்னும் மூட்டுவீக்க நோய்க்கான காரணம் இன்னும் மூடுமந்திரமாகவே உள்ளது. ஆனால் காரணத்தைக் தேடும் அதே வேளையில், இந்நோய் கண்டவர்களிடம் காணப்படும். இதன் நோய்குறிகளிலிருந்து விடுபடச் செய்யவும் வேண்டியவர்களாக இருக்கிறோம்.

மனித உடலில் 205 எலும்புகள் ஒன்றோடொன்று தசைத்தளைகளில் மூலம் இணைக்கப்பட்டுள்ளன. இந்தத் தசைத் தளைகளுடன் இணைந்த சுமார் அறுநூறுக்கு மேற்பட்ட தசைகளுடன் எலும்புகள் இயங்குகின்றன. நல்ல உடல்நலம் உள்ளவர்களிடம் தசைகள் மூட்டு களை விரைவாகவும் திறமையாகவும் ஓசை, வலி எதுவும் இன்றியும் அசைக்கின்றன. மூட்டுகளின் மேற்பரப்புகள் மென்மையான, உறுதியான குருத்தெலும்புகளால் மூடப்பட்டுள்ளன. இக்குருத் தெலும்புகளின் மீது ஒருவிதச் சவ்வு உள்ளது. இச்சவ்வில் உராய்வைத் தடை செய்யும் ஒருவகைச் கரப்புநீர் சுரக்கிறது. இதனால் அசையும் போது குருத்தெலும்புகளில் பிளவு கள் எதுவும் ஏற்படுவதில்லை. எனவேதான் நமது மூட்டுகள் தடையின்றியும் எளிதாகவும் அசைகின்றன. ஆனால், மூட்டுவீக்க நோய்தாக்கும் போது, இந்நிலை விரைவாக மாற்றமடைகிறது. மூட்டுகளும் தசைகளும் - பெரும்பாலும் கைகளிலுள்ள சிறிய மூட்டுகளும், மணிக்கட்டும் வீங்கி வலியெடுக்கின்றன. அழற்சி கண்டு, சிவந்து, தொட்டால் சுரீரென்ற வலியுடனும், விறைத்தும் காணப்படுகின்றன. இம்மூட்டு களிலுள்ள சவ்வுகள் வீங்குகின்றன. குருத் தெலும்பு பசையற்று முரடேறி, அதன் முனைகளில் காயம்பட்ட நிலையில் சிதைவடைகின்றன. இதனால் ஏற்படும் அரிப்பு காரணமாக மூட்டுகளைச் சூழ்ந்து அளவுக்குமீறிய சுரப்புநீர் உண்டாகிறது. அதனைச் சூழ்ந்த தசைகளும் தசைத் தளைகளும் இதன் தொடர்பால் அழற்சி கண்டு, தொட்டால் வலியெடுக்கின்றன. இதன் விளைவாக வலியும் விறைப்பு தன்மையும் உண்டாகின்றன. மூட்டுகளின் இயக்கம் வலியுண்டாக் குகின்றது. தசைகள் வலிமையிழக்கின்றன. இதனால் இயக்கம் குறைகின்றது. இந்நிலை பல வாரங்கள், மாதங்கள், ஆண்டுகள் எனத் தொடரலாம். சில சமயங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட பல மூட்டுகளில் இவ்வாறு ஏற்பட லாம். மிக அரிதாக சில சமயங்களில் முதுகுத்தண்டு பாதிக்கப்படலாம்.

இக்கோளாறைச் சரியானபடி கவனித்து குணப்படுத்தாவிட்டால், நிரந்தரமான சேதமும், உறுப்புக் குறைபாடும் உண்டாகக்கூடும். உங்கள் எலுப்பு மூட்டுகளை மூடியுள்ள குருத்தெலுப்புகளில் எவ்வளவு சேதம் ஏற்பட்டபோதிலும் பல்லைக்கடித்துக்கொண்டு எப்போதும் போல் இயங்கலாம். அல்லது ஒரு குறிப்பிட்ட கால அளவிற்கு மேல் மூட்டுகளை அசைக்கத் தவறினால், அவை அப்படியே விறைத்து நின்று விடும். முடிவாக, மூட்டுகளை இழக்க வேண்டியதுதான்.

## என்ன செய்யவேண்டும்?

எல்லா நோய்களையும் போலவே இதையும் வருமுன் தடுப்பதே சிறந்தது. உறுப்புக் குறைபாடுகள் ஏற்பட்ட பிறகு அவற்றைச் சரிசெய்ய முயல்வதைவிட, அவை வராமல் தடுப்பது மிக எளிது.
வலியிருந்து விடுபடவும், உறுப்புகள் முடமாவது தடுக்கப்படவும் வேண்டு மானால், என்னவிதமான சிகிச்சை யைப் பின்பற்ற வேண்டும்? மூட்டு வீக்கத்தின் காரணம் அறியப்படா விட்டாலும், வலியிலிருந்து விடுபடவும், குறிப்பாக ஆரம்ப கட்டங்களில் உறுப்புகள் முடங்கி விடுவதைக் குறைக்கவும் அநேக வழிமுறைகளைக் கையாளலாம்.

பல நிவாரணிகள் உண்டு. இவற்றில் சில பயனுள்ளவை, பல பயனற்றவை, முழுமையாக குண மளிக்கும் மருத்துவம் இல்லை.
பொது உடல்நலம் மேம்பட வழிகாண வேண்டும்.

முடக்குவாதம் அல்லது மூட்டுவீக்கம் எலும்பு மூட்டுக்களோடு மட்டும் தொடர்புடையதல்ல. எனவே பொது உடல் நலத்தை முடிந்தவரை நல்ல நிலையில் வைத்திருக்கவேண்டியது மிக முக்கியம். நல்ல சமச்சீர் உணவு உட்கொள்வதிலும், வலி அனுமதிக்கும் வரை உறுப்புக்களின் இயக்கத்திற்கு வேலை கொடுப்ப திலும் கவனம் செலுத்தப்பட வேண்டும். இந்நோயின் போக்கு பல சமயங்களில் இரத்தசோகைக்கு வழிவகுப்ப தினால், அதுவும் சரிசெய்யப்படவேண்டும்.

உறுப்புக் குறைபாடுகளைத் தவிர்க்கவேண்டும்.

நோயின் ஆரம்ப கட்டத்தில், வலியும் வீக்கமும் கடுமையாகவும் உறுப்புக்களை அசைக்க முடியாத நிலையிலும் இருக்கும் போது, உறுப்புக்கள் முடக்கமடைவதைத் தடுக்க சிறப்புக்கவனம் செலுத்த வேண்டும். இந்நிலையில் சில முன்னெச்சரிக்கைகள் எடுக்கப்படா விடில் உறுப்புக்கள் முடங்கி விகாரமடைவது எளிதாகிவிடும். ஏறுக்கு மாறான நிலைகளில் நீண்ட நேரம் கழிக்கக்கூடாது. (கைகள், கால்கள், இடுப்புப் பகுதிகளை அதிக நேரம் வளைத்து வைத்துக்கொண்டு இருத்தல்) இப்படிப்பட்ட நிலை, பல தலையணைகளை வைத்துப் படுத்திருக்கும் போதே, நாற்காலியில் உடலை வளைத்து நீண்டநேரம் உட்கார்ந்திருக்கும் போதோ ஏற்படலாம். உங்கள் மருத்துவரின் ஆலோசனைப்படியும் உங்கள் அனுபவ அறிவைக்கொண்டும், சில சமயம் ஒரு பயிற்சி பெற்ற நர்ஸ் அல்லது சிகிச்சையாளரின் உதவி யாலும், எந்த அளவு அசைவுகள் போதுமானவை, எப்படிப்பட்ட இருப்பு நிலைகள் ஏற்புடையவை என்பதை உங்களால் அறியமுடியும். மூட்டுகளைப் பாதுகாக்க உங்களுக் குப் பிளாச்சிகள் தேவைப்படலாம். இறுக்கிகள் அல்லது கவட்டுக்கட்டை போன்ற வற்றின் உபயோகமும் தேவைப் படலாம். இவற்றின் உதவியால் நீங்கள் இயங்கும்போது மூட்டுக்களின்மேல் ஏறும் ஏடையைக் குறைக்கவும், அசையும்போது தேவையில்லாத காயங்கள் ஏற்படு வதைத் தடுக்கவும் முடியும். இத்துடன் மருத்துவ சிகிச்சையும் தொடர வேண்டும்.


## மருந்துகள்

மூட்டு வீக்கத்திற்கான மருந்துகளைப் பற்றி என்ன? மூட்டு வீக்கத்தின் இயல்பைக் கருத்தில்கொண்டு நூற்றுக்கணக்கான நிவாரணிகள் கண்டுபிடிக்கபட்டுள்ளன. இவற்றில் பல குணப்படுத்துவதாகவும் கூறப் படுகிறது. இம்மருந்துகளில் பெரும் பாலானவை வலியிலிருந்து விடுபடுபதற்குப் பெரிதும் துணை நிற்கின்றனவேன்றி, வேண்டாத பின்விளைவுகளிலிருந்து விடுதலை கிடைக்க வழி செய்வதில்லை. உங்கள் மருந்துவரின் பரிந்துரைப் படிதான் கார்ட்டிசோனை உபயோகிக்கவேண்டும். ஏனெனில், அது நிவாரணமளிக்கிறபோதிலும், நீண்ட நாள் உபயோதித்தால் மிக மோசமான பின்விளைவுகளைக் கொண்டுவரும்.

## இயற்கை மருத்துவம்

நீர், இதைப் பெரும்பாலும் நீங்கள் உங்கள் வீட்டிலேயே செய்துகொள்ள முடியும். செலவு குறைவு, எளிய சிகிச்சை வரலாற்றுக் காலந்தொட்டே இயற்கைச் சாதனங்கள் வலி நிவாரணத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன. முடக்குவாதம் கண்ட நபர், சிலவகை வெப்பமூட்டுதல் மற்றும் குளிர்ச்சியூட்டுதல் முறைகளாலும், உடற்பயிற்சிகளாலும் பயனடைய முடியும். இவை எளியவை, பயனுள்ளவை, நச்சுத்தன்மையற்றவை. இவை மருந்து எடுத்தாலும் இல்லாவிட்டாலும் ஒவ்வொரு முடக்குவாத கேசுகளிலும் பயன்படுத்தப்பட வேண்டும். இந்த அன்றாட மருத்துவ முறையைப் பற்றி டாக்டர். கொலபாரோ என்பவர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். இந்நோயைக் குணப்படுத்துகிற அல்லது உறுப்பு குறைபாடுகளைத் தடுக்கிற மருந்து எதுவும் இல்லை. சிகிச்சையின் பிற வகை வடிவங்களாக ஒய்வு, வெப்பச் சிகிச்சை, உடற்பயிற்சி, மற்ற இயற்கைச் சாதனங்களின் நடவடிக்கைகளின் இடத்தை மருந்தால் எடுத்துக்கொள்ள இயலாது.

ஓர் முக்கிய நன்மையும் டாக்டர் கொலபாரோவால் குறிப்பிடப்பட்டுள்ளது. வீட்டு உபயோகத்திற்கு இது எளிதாகவும், கிடைக்கக்கூடியதாகவும் உள்ளது. பனிக் கட்டியும் வெந்நீரும் ஒருங்கே வீட்டில் கிடைப்பது அரிது. என்றாலும் இவை இரண்டையும் கொண்டு சிகிச்சை அளிக்கும் போது, நோயின் ஆரம்ப நிலைகளில் வீக்கம், வலி ஆகியவற்றிலிருந்து விடுபடவைப்பதில் மிக ஆற்றலுள்ள சாதனமாக இது விளங்குகிறது மசாஜ் மற்றும் உடற்பயிச்சி ஆகியவற்றிற்கும் ஆயத்தப்படுத்துகிறது. இவை இரண்டும் அசௌகரியங்களைக் குறைப்பதற்கும், பலவித இயக்கங்களை எளிதாக்குவதற்கும் மிக மிக இன்றியமை




யாதவை. குறிப்பிட்ட வெப்பநிலையிலுள்ள நீர், இரத்தவோட்டத்தைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கவும், குணமடைதலை விரைவு படுத்தவும் மிக ஆற்றலுள்ள வழிமுறைகளுள் ஒன்று. தொடர்ந்து முயற்சி செய்து வரவேண்டியதிருந்தாலும் பெரும் பயனைக் கொண்டுவரும்.

வீட்டில் இந்த எளிய வழிமுறைகளை நாமே பின்பற்றுவது எப்படி என்று பார்ப்போம் மூட்டுவீக்கத் தொல்லையின் ஆரம்பக் கட்டத்திலேயே சிகிச்சை மேற்கொள்ளுவது சிறப்பு என்றாலும் நாள்பட்ட முடங்கிய நிலையிலும் சிகிச்சை பெறலாம். ஆரம்பக் கட்டங்களில், மூட்டுகள் வீங்கி, சூடாகவும், தொட்டால் வலியுடனும், விறைந்தும், வலி மிகுந்தும் இருக்கும்போது ஒன்று அல்லது இரண்டு நாள் சிறிது நேரத்திற்கு ஒருதரம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஐஸ் பையை வைத்தெடுப்பது வலியிலிருந்து பெருமளவு விடுதலையை அளிக்கும், வீக்கமும் குறையும். அதன்பிறகு குளிர்ந்த நீர், வெந்நீர் இரண்டாலும் மாற்றி ஒற்றடம் (துவாலைகள் அல்லது துணிச்சுருள்கள் மூலம்) தரலாம். இதை தினமும் பல தடவைகள் செய்துவர வேண்டும்.

பயிற்சிகள், சிகிச்சையின்போது, இடையில் வலி அனுமதிக்கும் வரை மூட்டுகளை அசைத்துப் பயிற்சி தரவேண்டும். அதாவது சிறிது வலியைப் பொறுத்துக் கொள்ள வேண்டும். இந்தக் கட்டத்தில் சிகிச்சைகளுக்கு இடையில் மூட்டுகளுக்கு ஒய்வு தர பிளாச்சிகளை அணிய வேண்டியது அவசியமாகலாம். இதனால் உறுப்புக் குறைபாடுகள் தடுக்கப்படும். மூட்டு நீட்டிய நிலையில் இருக்கவேண்டிய சமயத்தில்

(தொடர்ச்சி 15ம் பக்கம்)




SPICE LAND

FOR THE ASIAN TASTE OF SPICE CURRY

குளிரூட்டப்பட்ட ..... மேலதிக இடவசதி கொண்ட ......

100 இடியப்பம் சம்பல் சொதியுடன் £12 பவுண் மட்டுமே

திருமண வைபவங்கள், பிறந்தநாள் கொண்டாட்டங்கள், சமூக ஒன்றுகூடல்கள் போன்ற உங்கள் விருந்துபசார தேவைகள் எதுவானாலும் அதற்கு தகுந்தபடி சுவையான, தரமான உணவுகளை ஓடர் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

212 LONDON ROAD,
CROYDON,
SURREY CR0 2TE

உங்கள் அனைத்து தொடர்புகளுக்கும்
020 8667 1700
020 8649 8895
07984 038 757

7 days a week
Open 11am to midnight
£15 பவுண்களுக்கு மேல் உணவை வாங்கினால் 3 மைல் எல்லைக்குள் இலவசமாக வினியோகம் செய்யப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## SS Estate Agent

வளமான வாழ்வுக்கு ...
வதிவிடம் வாங்கிட..

£1000 முதல் 100,000 வரை தொழில் கடன் வசதி, வீடு வாங்க, விற்க மற்றும் வாடகைக்கு அமர்த்த நம்பகரமான நிறுவனம் SS Estate Agent.
குறைந்த முதலீட்டில் வீடு மற்றும் வியாபார ஸ்தாபனங்கள் வாங்குவதற்கும் எங்களை நாடுங்கள்.

**Sales - Lettings- Mortgages**

**40-42, First Floor, High Street North,**
**East Ham, London E6 2HJ**
**Tel: 020 8471 7779 Fax: 0871 522 7277**


# விமான கோளாறுக்கு மிருக பலி

பல வழிகளில் பிரமிக்கத்தக்க அளவு வளர்ச்சியைக் மனிதன் கண்டுவிட்டதாக நாம் பீற்றிக் கொள்கின்ற அதேசமயம், இன்னெரு பக்கம் மனிதன் இன்னும் கற்கால யுக



நம்பிக்கைகளில்தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றான் போல் தெரிகின்றது. நேபாளத்தின் தலைநகரான காட்மண்டுவின் சர்வதேச விமானநிலையத்தில், ஆடுகளை அதிகாரிகள் பலிகொடுப்பது, நிகழ்ந்து வருகின்றது என்று யாராவது சொன்னால், நீங்கள் நம்பத் தயாரா? போயிங் 757 ரக விமானமொன்றிற்கு முன்பாக, தமது கடவுளுக்கு , ஆடுகளைப் பலி கொடுத்து, இவர்கள் பிரார்த்தித்தும் வருகின்றார்கள். அடிக்கடி விமானங்களில் ஏற்படும் தொழில்நுட்பக் கோளாறுகளை இல்லாது ஒழித்து விடு இறவைா என்று ஆகாயத்திற்கான கடவுளை வேண்டுதல் செய்கின்றார்களாம் இவர்கள்.

உலகிலே மிக மோசமான அபிவிருத்தியைக் கண்டுவரும் நாடுகளில் ஒன்றாக இருக்கும் இந்த நேபாள ராஜ்யத்தில், விததியாசமான பல மதச் சடங்குகளுக்கும், கலாச்சாரத்திற்கும் பெயர் பெற்ற நேறய என்ற இனத்தினரிடையே உள்ள வழக்கு, உண்மையிலேயே விசித்திரமானதுதான். ஒரு பெண், தனது மாதவிலக்கு காலத்தில், ஆண்களிடமிருந்து பிரிக்கப்படுவதுடன், 12 நாட்களை இருட்டறை ஒன்றில் கழிக்கும்படி விடப்படுகின்றாள். 12வது நாளன்று, சூரிய நமஸ்காரம் செய்துவிட்டுத்தான் இவள் வெளியில் வரலாம்.

# பருவங்களின் மாற்றம்

நடக்கும் பருவத்தில் நிலாவினைக் காட்டி
"நிலாநிலா ஓடிவா!" என்றழைப்பாள் அன்னை
நடக்கமுடியா வயதில் சர்க்கர நாற்காலியில் இருத்திவிட்டு
"உலாப்போகத்தான் வேண்டுமா?" என்றிடுவான் பிள்ளை.

அறுசுவை உணவுஆக்கி அன்புடன் அரவணைத்து
"வயிறு நிரம்பச் சாப்பிடு" என்றிடுவாள் அன்னை
சுறுசுறுப்பிலா வயதில் ஒருவேளை உதவு என்றால்
"நிர்மலாவுக்கு நீச்சல் நாள்" என்றிடுவான் பிள்ளை.

பிறைகாட்டி வளர்த்தபிள்ளை பெயருக்குத்தான் பிள்ளை
உருவத்தால் பெருத்தாலும் பெற்றோர்க்கோ சிறுபிள்ளை

பருவங்களின் மாற்றத்தால் பரிதவிக்கும் பெற்றோர்
பாரிதனில் பெற்றதினால் பித்தாகி விட்டார்

கருவாகி உருவாகி கால்நூற்றாண்டு ஆனபின்னே
அருகிவிடும் அரவணைத்த அன்னை தந்தை நேசம்!
இருவராக இணைந்தபின்னே இறுதிவரை அவரேதுணை
பெற்றவரோ மற்றவரோ அது கடந்துபோன பாசம்!

உரும்பிராய்க் கவி மு.து.செல்வராஜா

# இரட்டைத் தலைகளோடு கன்று


தினம் தினம் சம்பவிக்கும், உலக நிகழ்வுகள், ஏன் இப்படிச் சம்பவிக்கின்றன என்று நம்மை அடிக்கடி வியக்க வைக்கின்றன. அமெரிக்காவின் கலிபோர்னியா நகரிலும், ஒரு மாட்டுப் பண்ணையில் நடந்த சம்பவம், பலரையும் வியக்க வைத்திருக்கின்றது. இரண்டு தலைகளுடன் கூடிய ஒரு கன்றை, பசுவொன்று ஈன்றிருப்பதுதான் அந்தப் புதினம். தனது நான்கு கண்களையும் ஒரே சமயத்தில் சிமிட்ட இதனால் முடிவதால், இதற்கு பிளிங்கி என்று பெயரிட்டிருக்கின்றார்கள்.





## ஓம் ஸ்ரீகருமாரி அம்மன் ஜோதிட நிலையம்

இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள SB லக்ஷ்மணாராஜூ குருஜூ Aadivasi General Secretary (Face Reading) Durga Poojari திருமதி சுபலக்ஷ்மி அவர்கள் கைரேகை, முகநாடி, ஆகியவற்றைக் கொண்டு துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை பற்றிய விபரங்களை தமிழில், தெலுங்கில், ஆங்கிலத்தில் கூறுவார்.

துல்லியமாக கணித்து பார்க்கப்படும் விடயங்கள் (Astrology)



- கணவன் மனைவி ஒற்றுமையின்மை
- கைரேகை, முகநாடி, வசியப்பொருத்தம், பஞ்சாங்கம் பார்த்தல்
- திருமணயாதகம், குறிப்பு பொருத்தம், வசியம், ஆண். பெண்
- வாஸ்து சாத்திரம், நாட்டில் ஏனைய பிரச்சினைகள்
- தொழில் வியாபார லட்சுமிகரம் விடயமான வசியப்பொருத்தம்
- எதிரிகள், கண்திருஷ்டி , கோட் வழக்குகள்
- வாகனப்பொருத்தம் லட்சுமி வசீகரம்
- பெண்பிள்ளைகள் ஒற்றுமையாக பெற்றோருடன் நிலைத்திருத்தல்
- பிரிந்தவர் ஒன்றுகூடுதல் எங்கு இருந்தாலும்
- கிரகப் பிரவேஷம் - லட்சுமி பூசை- குரு பூசை



ஆயுர் வேத வைத்திய ஆலோசனை
இரத்தக்கொதிப்பு, நீரழிவு, தொய்வு போன்ற அனைத்து வியாதிகளுக்கும் ஆலோசனை வழங்கப்படும்

ஆகியவை நல்ல முறையில் கணித்தும் பூசை செய்தும் விபரங்கள் குருஜி ஆசீர்வாதத்துடன் செய்து தரப்படும்
*இவர் நியுசிலாந்து பாரீஸ், ஜேர்மனி, சிங்கப்பூர், மலேசியா, சுவிஸ் மற்றும் பல உலகநாடுகள் எங்கும் விஜயம் செய்துள்ளார்.*

**F.C.C Super Store**
**Manor Park,**
**244-246 High Street North,**
**London E12 6SB**

**Mobile:**
**07852 506 993**
**07983 204 697**
**020 8470 6564**



## கற்பகம்

### மக்கள் மனங்கவர்ந்த தமிழ்க் கடை

☆ Fresh இறைச்சி எப்பொழுதும் கிடைக்கும். பெரிய இறைச்சி ஓடர்கள் செய்யும் போது சகாய விலைக் கழிவுடன் சிறு சிறு துண்டு களாகவும் வெட்டித்தரப்படும்.



☆ புதிய, பழைய சினிமாப் படங்கள் மற்றும் தொடர் நாடகங்கள் எப்பொழுதும் கிடைக்கும்



இலங்கையில் இருந்து தருவிக்கப்பட்ட மளிகைப் பொருட்கள் மற்றும் மரக்கறி வகைகள் மலிவு விலையில் பெறலாம்.

**Buy One Get One Free**

★ Basmathi Rice 5kg ★Basmathi Rice 10kg
★ Easy Cook 5kg

- நல்லெண்ணை 2 for £5
- மீன் வகைகள் 2 for £5 (except King fish)

புத்தாண்டை சிறப்பாக கொண்டாடிட தேவையான அனைத்துப் பொருட்களும் கிடைக்கும்

**36 Loampit Hill,**
**Lewisham,London SE13 7SW**
**Tel: 020 8694 8810**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்தமாத போட்டி முடிவுகள்

## சொற்களைத் தேடுதல் போட்டி முடிவு

**போட்டியில் பரிசுபெறும் இருவர்**

1. பாமா தவசீலன், சவுத்தோல்
2. த.சிவக்கொழுந்து, விம்பிள்டன்



### சரியாக விடை எழுதியனுப்பியவர்களில் இடமுள்ளவரை இடம் பெறுபவர்கள் வருமாறு


ரி.சிவசுப்பிரமணியம், கெய்ஸ்
தயாபரன் ஜெனாஸ்கா, இல்பேர்ட்
செ.அவயம்பா, சவுத் கரோ
ஜெசிந்தா யேசுதாசன், கம்பவெல்
ஜெ.ஜெயதர்ஷன், ஈஸ்ட்காம்
ஜெகதீஸ்வரன் கஜன், ஈஸ்ட்காம்
ஜெகதீஸ்வரன் கனுஷா, ஈஸ்ட்காம்
எஸ்.எம்.மூர்த்தி, சவுத்வுட்பேர்ட்
சி.சஜித், லூாசியம்
ம.பிரவீன், குறொய்டன்
சி.சந்தியா, கற்பேர்ட்
கோ.கீர்த்தனன், பொரஸ்ட் கில்
சுதர்சினி சுப்பிரமணியம், வுட்லி
நிவேதன் நிர்மலேந்திரா, கொலியஸ்வுட்
சரிகா சாந்தக்குமார், மோடன்
சுபன் சாந்தக்குமார், மோடன்
கம்ஷாயினி சத்தியமூர்த்தி, சிட்னம்
வனிதாதேவி மதியழகன், ரூட்டிங்
பவித்திரா, எட்மன்ரன்
பிரவீணன், பிரதாபன் மத்தியூ, மிச்சம்
லக்ஷிகா தவராஜா, என்பீல்ட்
இராசலிங்கம் சுயேந்தினி, கொலியஸ்வுட்
தனபாலசிங்கம் பவிஷா, லூாசியம்
இ.நிதுர்ஷன், கொலிங்டேல்
சாரங்கன் லோகேஸ்வரன், எட்மன்ரன்
வர்ணன் லோகேஸ்வரன், எட்மன்ரன்
குளொறியா வாணிதாசன், பொரஸ்ட் கில்
சாந்தினி பிரசாந்தன், கொலியஸ்வுட்
பாமினி நிர்மலேந்திரா, கொலியஸ்வுட்
கவிதா சக்தீஸ்வரன், மிச்சம்
கி.சாருசன், தோண்ரன் கீத்
சி.கீர்த்தனா, தோண்ரன் கீத்
பொ.கந்தசாமி, தோண்ரன் கீத்
இந்துகா விஜயன். தோண்ரன் கீத்
சுகன்யா, தோண்ரன் கீத்
ம.தேருஜா, தோண்ரன் கீத்
காந்தன் விஜயன், தோண்ரன் கீத்
சரண்யா ஏகம்பநாதன், பொரஸ்ட்கில்
அஞ்சலா யோகநாதன், இல்பேர்ட்
அனுசா யோகநாதன், இல்பேர்ட்
கஜன் தனபாலசிங்கம், லூாசியம்
கஜந்தன் இராசலிங்கம், கொலின்டேல்
அகிலாஸ், கற்பேர்ட்
நிருஷா அருளம்பலம், மனோபார்க்
கரீஷா அருளம்பலம், மனோபார்க்
யாதவன் கருணைக்குமார், என்பீல்ட்

தர்ஷன் இராசலிங்கம், கொலிங்டேல்
பா.மிதுனன், கிறீன்பேர்ட்
மெளழினி சதாசிவம், வெம்பிளி
பாலச்சந்திரன், பிளெய்ஸ்ரோ
சுலக்ஷன் இராசலிங்கம், கொலிங்டேல்
காருணி குலோத்துங்கன், இல்பேர்ட்
பவித்திரா தேவராசா, இடாட்பேர்ட்
சாந்தக்குமார் துசாந்தன், வெம்பிளி
தனுஷன் பூபாலசிங்கம், ஈஸ்ட்காம்
சுலக்ஷன் பூபாலசிங்கம், ஈஸ்ட்காம்
பாமினா அம்பிகைநாயகம், லீ கிறீன்
தனுஷியா தங்கராஜா, கால்ஸ்டன்
மகிநோத் நரசிம்மன், இல்பேர்ட்
க.யோகராஜா, கற்பேர்ட்
சு.மிதுஷா, கெயிஸ்
கந்தையா யோகராஜா, கற்பேர்ட்
அபிதா சத்தியநாதன், எட்ச்வெயர்
சோபனா பெனடிற், சிங்பேர்ட்
றஸ்மியா, றங்கீதா, வூல்விச்

## குறுக்கெழுத்துப் போட்டி முடிவு

**போட்டியில் பரிசுபெறும் இருவர்**

1. பகிரதி அம்பிகைநாயகம், லீ
2. மகிழ்வினி தாஸ், அக்ரன்



### சரியாக விடை எழுதியனுப்பியவர்களில் இடமுள்ளவரை இடம் பெறுபவர்கள் வருமாறு

தயாபரன் ஜெனாஸ்கா, இல்பேர்ட்
செ.அவயம்பா, சவுத் கரோ
எஸ்.எம்.மூர்த்தி, சவுத்வுட்பேர்ட்
சி.சஜித், லூாசியம்
ம.பிரவீன், குறொய்டன்
சி.சந்தியா, கற்பேர்ட்
கோ.கீர்த்தனன், பொரஸ்ட் கில்
சுதர்சினி சுப்பிரமணியம், வுட்லி
நிவேதன் நிர்மலேந்திரா, கொலியஸ்வுட்
சரிகா சாந்தக்குமார், மோடன்
சுபன் சாந்தக்குமார், மோடன்
த.சிவக்கொழுந்து, விம்பிள்டன்
யாதவன் கருணைக்குமார், என்பீல்ட்
கஷோயினி சத்தியமூர்த்தி, சிட்னம்
வனிதாதேவி மதியழகன், ரூட்டிங்
றஞ்சனா குமரசாமி, தோண்ரன் கீத்
பிரவீணன், பிரதாபன் மத்தியூ, மிச்சம்
லக்ஷிகா தவராஜா, என்பீல்ட்
சாரங்கன் லோகேஸ்வரன், எட்மன்ரன்
வர்ணன் லோகேஸ்வரன், எட்மன்ரன்
குளொறியா வாணிதாசன், பொரஸ்ட் கில்
சாந்தினி பிரசாந்தன், கொலியஸ்வுட்
பாமினி நிர்மலேந்திரா, கொலியஸ்வுட்
கவிதா சக்தீஸ்வரன், மிச்சம்
அஞ்சலா யோகநாதன், இல்பேர்ட்
அனுசா யோகநாதன், இல்பேர்ட்
திலகவதி குமாரசுவாமி, தோண்ரன்கீத்
கஜந்தன் இராசலிங்கம், கொலின்டேல்
பா.சிந்தியா, சவுத்தோல்
சுலக்ஷன் இராசலிங்கம், கொலிங்டேல்
பா.இரவீந்திரன், கற்பேர்ட்
காருணி குலோத்துங்கன், இல்பேர்ட்
தனுஷியா தங்கராஜா, கால்ஸ்டன்
மகிநோத் நரசிம்மன், இல்பேர்ட்
க.யோகராஜா, கற்பேர்ட்
கந்தையா யோகராஜா, கற்பேர்ட்
அபிதா சத்தியநாதன், எட்ச்வெயர்

# ஈழத்தின் பிரபல தவில் மேதை குமரகுரு காலமானார்



ஈழத்தின் பிரபல தவில் மேதை அளவெட்டி என்.குமரகுரு சென்ற மாதம் 26-ஆம் நாள் புதன்கிழமை தனது 73 ஆவது வயதில் காலமானார்.
இவரின் புகழுடல் மக்களின் வணக்கத்திற்காக கொழும்பு, கல்கிசையில் உள்ள உள்ள மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு, நேற்று இறுதிக்கிரியைகள் நடைபெற்றன.
ஈழத்தின் மிகவும் பிரபல்யம் பெற்ற தவில் மேதையான இவர் தவில் வித்துவான், தவில் லய ஞானகலாநிதி, கலாபூசணம் ஆகிய விருதுகள் உட்பட பல விருதுகளைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# நிர்வாண விநாயகர் சிலைகள் அகற்றம்

கனடாவில் சர்சைக்குரிய வகையில் நிர்வாணமாக இடம் பெற்றிருந்த விநாயகர் சிலைகள் இந்துக்களின் போராட்டத்திற்கு பிறகு அகற்றப்பட்டது.
கனடாவில் டொரண்டோ நகரில் ரயன் மெக்கோர்ட் அமைப்பு சிலைகளின் கண்காட்சி அமைத்திருந்தது. இதில் விநாயகர் சிலைகளும் அமைக்கப்பட்டிருந்தன. இதில் அமைக்கப்பட்டிருந்த 4 சிலைகளில் ஒரு விநாயகர் சிலை நிர்வாணமாக இடம் பெற்றிருந்தது.
இது அப்பகுதி இந்து மக்களின் மனதை புண்படுத்துவதாக இருந்தது. இதையடுத்து இந்து அமைப்பைச் சேர்ந்த தலைவர்களும், மதகுருமார்கள் அப்பகுதி மேயரை சந்தித்து முறையிட்ட பிறகு அகற்றப்பட்டது.


# LUCKVA

**Chartered Management Accountants**

உங்கள் வியாபாரத்திற்கு தேவையான அனைத்து கணக்கியல், மற்றும் ஆலோசனை வழங்கப்படும்

- Accounts Preparation
- Loan Mortgage arrangements
- VAT & PAYE
- Bookkeeping
- Self Assessment
- Business Advice
- Management Account

முதல் ஆலோசனை இலவசம்

150 Altmore Avenue
East Ham
London E6 2BT
Tel/Fax: **020 8472 4759**, Mob:**07748 978 843**

தொடர்புகளுக்கு:
திரு.ரி.எஸ்.தர்மலிங்கம் ACMA





**தமிழில் சாரதிகளின் எழுத்துப் பரீட்சை வகுப்புகள்**
**Theory Test Classes in Lewisham**





- **Theory Test மற்றும் Hazard Perception Test ஆகியவை இலகுவான முறையில் தமிழில் விளக்கப்பட்டு, கணனிமூலம் பயிற்சிகள் வழங்கப்படுகிறது.**
- **தனி வகுப்புகள், கூட்டுவகுப்புகள் ஒழுங்கு செய்யலாம்.**
- **பரீட்சைகளுக்கும் ஒழுங்குசெய்து தரப்படும்**

**தொடர்புகளுக்கு: வேந்தன் 07749051394**


# வாசகர் கடிதம்

**வணக்கம்,**
தங்களடைய பத்திரிகையில் பயனுள்ள பல நல்ல கட்டுரைகள் வருவதையிட்டு மிகவும் மகிழ்ச்சி. குறிப்பாக குறுக்கெழுத்துப்போட்டி எனக்கு மிகவும் பிடித்தது. சிறுவர்களுக்கு இருப்பதைப் போல் பெரியவர்களுக்கும் சற்று கடினமான குறுக்கெழுத்துப் போட்டி வந்தால் நல்லது. தங்கள் பத்திரிகையின் மூலம் நாம் மறந்து போன பல பழைய சொற்களையும் புதிய சொற்களையும் தெரிந்து கொள்ள முடிகிறது. பாராட்டுக்கள்.

**- அகிலா குணராஜா, குறொய்டன்**

**ஆசிரியர் அவர்கட்கு,**
செப்ரெம்பர் மாத வடலியில் சமுதாயத்திலுள்ள வன்முறைகளுக்கு சினிமா, தொலைக்காட்சி ஒரு காரணமா? என்ற கட்டுரையில் இளையோர்களின் வன்முறை போக்கிற்கு சினிமாவும் ஒரு முக்கிய காரணமாக இருக்கின்றது என நல்ல முறையில் அலசி எழுதினீர்கள். பாராட்டுக்கள். ஆனால் மக்கள் இக் காரணங்களை கருத்தில் எடுக்கிறதாக இல்லையோ.!!

**- ரவீந்திரன். ப. சவுத்தோல்**

**ஆசிரியர் அவர்கட்கு,**
ஐயா சிந்தனையின் வெளிப்பாடு என்ற கட்டுரை அபாரம். மனித மூளையின் செயற்பாடுகளை ஆழமான ஆய்வின் மூலம் வெளிப்படுத்திருக்கிறார். கட்டுரையாளர். கொண்ஸ்ரன்ரைன். முதல் வாசிப்பில் கட்டுரையில் மயக்கம் இருப்பதுபோல் தோன்றினாலும் இரண்டு மூன்று முறை படித்ததன் பின் பல அறிவுபூர்வமான விடயங்கள் வெளிப்படுகின்றன. பாராட்டுக்கள்

**- திருமதி. மனோகரராஜா, இல்பேர்ட்**

**ஆசிரியர்க்கு வணக்கம்,**
சென்ற மாத இதழின் 7ம் பக்கத்தில் உள்ள இலக்கிய திறனாய்வு, விமர்சனம் பற்றிய கட்டுரை படித்தேன். கட்டுரை பல பரிமாணங்களிலும் ஆராயப்பட்டிருந்தது. பயனுள்ள கட்டுரை. இதன் முதல் பகுதியை நான் படிக்கக்கிடைக்கவில்லை. உங்களிடம் சென்ற மாத இதழ் இருந்தால் அனுப்பி வைக்கவும்.. நன்றி

**- ப.புஸ்பராசா, ரூட்டிங்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடிகர் விஜயன் மாரடைப்பால் மரணம்

மூத்த நடிகர் விஜயன் சென்றமாதம் 22ம் திகதி மாரடைப்பால் காலமானார். அவருக்கு வயது 63

கிழக்கே போகும் ரயில் படம் மூலம் திரையுலகில் அறிமுகமானவர் விஜயன். அடுத்து வந்த உதிரிப் பூக்கள் படம் மூலம் ரசிகர்களை கொள்ளை கொண்டார். வில்லனாக, கதாநாயகனாக மிக அட்டகாசமான நடிப்பைத் தந்தவர் விஜயன். தொடர்ந்து ஒரு விடுகதை ஒரு தொடர்கதை, பசி, பாலைவன ரோஜாக்கள் உள்பட பல படங்களில் நடித்தார்.

# மழை வேண்டி தவளைகளுக்கு கல்யாணம்

வருண பகவானின் அருளை வேண்டி வாரணாசியில், தவளைகளுக்குக் கல்யாணம் செய்து வைத்து நூதன வழிபாடு நடத்தப் பட்டது.

உத்தரப் பிரதேச மாநிலத்தின் கிழக்குப் பகுதியில் வறட்சி நிலவுகிறது. மழை இல்லாமல் விவசாயிகள் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

இந்த நிலையில், பாரம்பரியமாக நடத்தும் தவளைக் கல்யாணத்தை நடத்த கிராமத்தினர் திட்டமிட்டனர்.

இதையடுத்து வாரணாசியில் உள்ள விடுதியில், இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஐந்து புரோகிதர்கள் வேத மந்திரங்கள் முழங்க, தவளைகளுக்கு கல்யாணம் நடத்தி வைக்கப்பட்டது. இந்த நூதனக் கல்யாணத்தை நூற்றுக்கணக்கானோர் கூடி கண்டு வருண பகவானை வணங்கினர். தவளைகளுக்குக் கல்யாணம் செய்து வைத்தால் மழை வரும் என்பது இந்தியக் கிராமங்களில் உள்ள மக்களின் நம்பிக்கை என்பது குறிப்பிடத்தக்கது.

மழைவேண்டி பெண்கள் நிர்வாண நடனம் ஆடும் வழக்கம் நேபாளம் மற்றும் இந்தியாவின் சில கிராமப்புறங்களில் இருக்கின்றது குறிப்பிடத்தக்கது.

# நெடுமாறனிடம் நலம் விசாரித்த முத்துலட்சுமி!

உண்ணாவிரதம் இருந்ததால் உடல் நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறனை, சந்தனக் கடத்தல் வீரப்பனின் மனைவி முத்துலட்சுமி சந்தித்து நலம் விசாரித்தார்.





ஈழத் தமிழர்களுக்காகப் போராடி வரும் நெடுமாறன் அவர்களின் உடல் நலம் குறித்து கேட்டறிந்தேன். அவ ரது போராட்டம் உன்னதமானது, அது தொடர வேண்டும். இந்த விடயத்தில் விரைவில் நல்ல முடிவு கிடைக்காவிட்டால் நெடுமாறனுடன் இணைந்து நானும் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிப்பேன். என்று கூறியுள்ளார்.

# மூட்டுவீக்கத்திலிருந்து... (12ம் பக்க தொடர்ச்சி)

வளைக்க நேரிடலாம். அப்போது பிளாச்சிகள் உதவும் குறிப்பாகக் கைகளில் மேல் சிறப்புக் கவனம் செலுத்தப்படவேண்டும்.

வெப்பம் மசாசைத் தொடர்ந்துதான் மூட்டுகளுக்கு வெப்பச் சிகிச்சை அளிக்க வேண்டும். வெப்பம் தசைகளைத் தளர்த்துகிறது. ஆனால் இரத்த வோட்டத்தையும் பெருகச்செய்கிறது. இதனால் இரத்தக்கட்டு உண்டாகலாம் அல்லது பாதிக்கப்பட்ட இடங்களில் இரத்தம் தேங்கிவிடலாம். இதை விட மசாஜ் தருவது மிகவும் பயனுள்ளது. மசாஜ‘ மென்மை யாகவும் திறமையாகவும் அளிக்கவேண்டும். மென்மையாக மசாஜ் அளிப்பதால் சில நாளங்களில் உள்ள இரத்தம் அகற்றப் படுகிறது. இவ்வாறு பல தடவைகள் செய்யும்போது வீக்கம் குறையும். இறுக்க மடைகிற திசுக்களையும் மசாஜ் அளிப்பது மெல்ல விரிவடையச் செய்கிறது. அடுத்த பயிற்சி, மூட்டுகள் வலியெடுக்கிறபடியால் முதலில் மிக மெதுவாகப் பயிற்சி தரவேண்டும். மூட்டுகளை முழு அளவு அசைக்கப் பிறர் உதவி தேவைப்படக்கூடும். தசைகள் விரைவாக வலிமை இழந்து அளவில் குறைவுபடுவதால், மூட்டை அசைக்கவேண்டுமெனில், முடிந்தவரை விரைவில் தசைகளுக்கு வலிமையூட்டப் படவேண்டும். எனவே பயிற்சியில் ஈடுபடுவது அவசியமாகிறது.

மசாஜ் சாதனங்கல் இயந்திர மசாஜ் சாதனங்களைப் பற்றி என்ன? இவை அபாயகரமானவையாக மாறக்கூடுமாகையால், இவை பரிந்துரைக்கப்படுவது வழக்கமில்லை. குறிப்பாக, தற்போது கிடைக்கும் சில அதிர்வு கருவிகளைச் சொல்லலாம். இவற்றின் பயன்பாடு நம்பிக்கைக்கு உரியவை என்று ஆய்வு குறிப்பிடவில்லை.

ஓய்வு மூட்டுவிக்கத்தைப் பொருத்தவரை ஓய்வின்மையும் கூடாது. அதிக ஓய்வும் நல்லதல்ல ஆரம்பக்கட்டங்களில் முழு உடலுக்கும் ஓய்வு தேவைப்படலாம். ஆனால் அது சமநிலைப்படுத்தப்படவேண்டும். அப்போதுதான் சிகிச்சையால் பலன் பெற முடியும். முட்டை ஆசைக்கவே முடியவில்லை யெனில், முழுமையாக இயக்க இழப்பு உண்டாகும்.

மன உணர்வுக் காரணிகள், மனம் மற்றும் உணர்வு சார்ந்த தகவலமைப்புகள் இந்த நோயைப் பொறுத்தவரை சிறிதளவாவது கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதுள்ளது. பல சமயங்களில் வாழ்வைப் பற்றிய நல்லெண்ணம் மற்றும் நம்பிக்கை போன்றவை குணமடைவதை மேம்படுத்தலாம். மாளாத வலி இருப்பதாகவும் மருந்துகள்தான் கதி என்றும் எண்ணிக்கொண்டால், அதுவே தான் நீடிக்கும். எப்போதும் மருந்துகளையே சார்ந்திருப்புது அபாயகரமானது. இயற்கைச் சாதனங்களைக் கொண்டு மருந்துகளின் உபயோகத்தைக் குறைக்கலாம். மருந்து களால் பல்வேறு பிரச்சினைகள் பிற்பட்ட நிலைகளில் உண்டாவது தவிர்க்க முடியாதது.

கடுமையான மூட்டுவீக்கத்திற்கு ஆளானவர் களில் ஒரு குறிப்பட்ட எண்ணிக்கையினருக்கு அறுவை சிகிச்சை அவசியப்படலாம். ஆனால் அனுபவமுள்ள, தகுதியுள்ள அறுவை நிபுணரின் ஆலோசனையின் படிதான் இது செய்யப்படவேண்டும்.

எனவே மூட்டுவீக்க நோயாளிகள், நோயின் எப்படிப்பட்ட கட்டத்திலும் வலியிலிருந்து விடுபடவும், நலம் பெறவும் வீட்டில் செய்யும் எளிய வழிமுறைகள் உள்ளன என்பதை உணரவேண்டும். மருத்துவர்களை அணுகி ஆலோசித்து அறிவுபூர்வமாக நடவடிக்கை மேற்கொள்ளுங்கள். இது பெருமளவு மருந்துவச் செலவுகளைக் குறைக்கும். மூட்டுவீக்கம் உறுப்புக்கான முடக்கிப்போடும் நோய்தான், என்றாலும் அதன் வீச்சைக் குறைக்கவும் தடுக்கவும் முடியும்.

டொக்டர்: ஈ.சி.கிறிஸ்டஸ்சன்


**IT Seekers**

Bringing IT to your Door Step



- ❖ PC Repair/Upgrading
- ❖ Wired/ Wireless Networking Setup
- ❖ IT Consultancy

**All the work undertaken by qualified, experienced Engineers**

**For all your IT need call**
**Praba 07985218798**
**(Please call weekends at any time and 4-6pm in weekdays)**
**e-mail : praba@itseekers.net**


Do you want to Utilize your free space at your shop,

You can have Internet Café at your business…

Contact us for free Consultancy and Quotation!

**கணனி சம்பந்தமான சகல ஆலோசனைகள் மற்றும் திருத்த வேலைகள் அனைத்தும் குறைந்த கட்டணத்தில் நிறைவாகச் செய்து தரப்படும்.**

Internet Cafe **தொடங்குவதற்கான சகல ஆயத்தங்களும் செய்து தருவதுடன் தொடர்ச்சியான பராமரிப்பு சேவையும் வழங்கப்படும்.**




**KNC School of Motoring**

- ★ DSA Approved Driving Instructors with more than 20 years experience.
- ★ PASSPLUS registered Instructors.
- ★ New Drivers save £'s with Car Insurances.
- ★ Motorway Lessons.
- ★ All the Instructors are members of the Association of Driving Instructors and Road Safety Officers of Haringay

தமிழரால் தமிழில் தமிழர்களுக்கு ஓட்டுனர் பயிற்சி

உங்கள் *Theory Test and Hazard Perception Test*
ஆகிய இரண்டும் தமிழில் கணனி மூலம் பயிற்சி வழங்கப்படும்
*Practical Test* தமிழில் தரமான முறையில் பயிற்றுவிக்கப்படும்

Area Covered West London.
Please contact Patrick:
**Tel: 07956 387386, 020 8864 9329,**
**Fax : 020 8423 0403**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# JayamNET® Ltd

Where Are Your Dreams Come True

Providing excellent services at very competitive prices!!



*FREE Hosting
*FREE Domain
*FREE Transfer
*Dynamic Web Desgins
*50% Charity Discount

Graphic Desgin:
*Banners
*Book Covers
*Logos,invitation Desgins
*Flyers, DVD & CD Coverd
*Commercial Posters and etc...

Form 1000 Calander affordable rates..
2008 Hurry Up!!
From £125

IT SOLUTION

No Hidden charges
All prices exc VAT.
Registered in England and Wales No. 5802596

Further details visit Our WEBSITE
E-mail : info@jayamnet.com
Website : www.jayamnet.com

Call on:
0793 2005 855

## Life in the UK பரீட்சை உதவி வகுப்புகள் - Lewisham



ஒவ்வொருவரின் கற்றல் திறமைகளும் வேறுபடுவதால் அவரவர் ஆற்றலுக்கு ஏற்ப வகுப்புகள் நடைபெறுகின்றன. கணனியில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. உங்களுக்கு வசதியான நேரத்தை தெரிவுசெய்து தனி வகுப்புகளை ஒழுங்கு செய்து கொள்ளலாம். துரித மிட்டல் வகுப்புகளும் உண்டு.

தொடர்புகளுக்கு: பிரபா, Tel: 07749 051 394

## TUTION AT YOUR HOME

### Key Stage 1: Nursery, Reception, Year 1 and Year 2

பாலர் வகுப்பில் இருந்து 2-ம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு அவர்களுக்கு தேவையான அடிப்படைக் கல்வியை முறையாகவும் பாடத்திட்டத்திற்கு அமைவாகவும் உங்கள் இல்லம் வந்து கற்பித்துக் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 07999144380

## EELAM SHOP
## ஈழம் கடை

இலங்கை, இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மளிகைப் பொருட்கள், கடலுணவு வகைகள், பத்திரிகைகள் சஞ்சிகைகள் போன்ற அனைத்துப் பொருட் களையும் மனநிறைவுடன் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்



399 Lewisham High Street
London
SE13 6NZ
Tel: 020 8690 6545

## EVEREST CURRY KING

சுத்தம், சுவை, தரம்
இவைகளுக்கு மறுபெயர் எவரெஸ்ட்...

நண்டு, இறால், கணவாய், சுறா, மீன், நெத்தலி போன்ற கடல் உணவுகளை பல சுவையில் சுவைத்து மகிழ்ந்திட...



24 Loampit Vale
Lewisham
Tel : 020 8691 2233

## Diamonds Palace

மங்கையர்க்கு எழில் சேர்க்க ...
புதுப் பொழிவு நிதம்பரவ ...
பொன்னகைக்கு மறுபெயர்தான்
வைரமாளிகை

மண்ணுலகில் மயன் படைத்தான்
வைரமாளிகை
ஆமாம்.. செல்லும் இடமெல்லாம்
இதே பேச்சு




76 Tooting High Street
London SW17 0RN
Tel: 020 8767 5333
Fax: 020 8767 5814

## BIRAVENAAS

South Indian & Sri Lankan Restaurant and Bar

Open Daily
Monday –Thursday
12.pm to 11.30pm
Friday to Sunday
12pm -01am



FREE DELIVERY*

Lunch Buffet £5.95
12.30 – 3.30

1, Sandhurst Market Sandhurst Road
Catford, London SE6 1DL
Tel: 020 8695 8625
*Orders over £12 with in 3 miles 6-10pm


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org